நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை-17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய ஆடி * ஜூலை - 14, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர்
புலவர்நாகசண்முகம்

பரிந்துரையாளர்
எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு நான்கு

பக்கம்	பயன்
3	எண்ணம்
5	மலைமேலே வாழுகின்ற மாதவன்
7	கருத்துக் கோவை
9	தொழில் வளர்த்த தோன்றல்
14	கவிதைப் பூங்கா
20	அன்புள்ள ஆச்சிக்கு
25	மலரும் உள்ளம்
28	நகரத்தார் கடித நடை
33	நட்சத்திரப் பலன்
35	செய்தி மலர்
38	புதுமை உலகம்
40	திருமுகம்

இனி வரும் இதழ்களில் இடம் பெறுகின்றன!

ஆவணி இதழில்!

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம், பி. காம். எழுதும் இனிய கட்டுரை.

அளவான குடும்பம் அளவற்ற இன்பம்

எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல். எழுதும்
பயன்மிகுந்த கட்டுரை! புள்ளி விவரப் படங்களுடன்!

தென்னாற்காடு மாவட்டமும் நகரத்தாரும்

சுப. திண்ணப்பன், எம்.ஏ., எம்.லிட். எழுதும்
வரலாற்றுக் கட்டுரை.

புரட்டாசி இதழில்!

தலைக்காவிரி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரம்

அரு. இலக்குவன், பி.ஏ., பி.எல். எழுதும்
பெருமை தரும் கட்டுரை.

பழநிமலைக் காவடி

புலவர்நாகசண்முகம் எழுதும்பொன்னான சிறுகதை.

உ

சிவமயம்



உண்டி கொடுத்தார் உயிர் கொடுத்தார்.
கல்வி கொடுத்தார் கண் கொடுத்தார்.

இதனை மெய்ப்பிக்கும் வகையில் பசிப்பிணி போக்கவும், கல்விக் கண் அளிக்கவும் அன்றுதொட்டு இன்றுவரை நம் மரபினர் வரையாது வழங்கி வந்துள்ளனர்.

புண்ணியத் தலங்கள் தோறும் புவிபோற்றச் சத்திரங்கள் அமைத்து அன்னதானம் செய்து வருகின்றனர்.

ஊர்கள் தோறும் பள்ளிகள், நகர்கள் தோறும் பள்ளிகள், தொழிற் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் தொடங்கி நம் மக்களையும் நாட்டு மக்களையும் நன் மக்களாக உருவாக்கும் பெரும் பணியில் நம் மரபினர் என்றும் முன்னின்று வருகின்றனர்.

காலத்திற்கேற்ற அறங்களைச் செய்வதிலும் நம் மரபினர் என்றும் பின் தங்கியதில்லை என்பதற்கு இச் செயல்கள் ஈடற்ற எடுத்துக் காட்டுக்களாகத் திகழ்கின்றன.

தொழில், பணி, கல்வி, ஆகிய காரணங்களால் தமிழகத்தின் தலைநகரில் நம் மரபினர் பெருகிவருகின்றனர். நகரிலும், நகரை ஒட்டிய பகுதிகளிலும் இன்னும் பலர் குடியேறி வருகின்றனர்.

இதனால் நம் பிள்ளைகளுக்கு, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இடம் கிடைப்பது பெரும் பிரச்னையாகி வருகின்றது.

அடையாறு, ராஜா அண்ணாமலைபுரம், புரசைவாக்கம், திருவொற்றியூர், அம்பத்தூர், வடபழனி ஆகிய பகுதிகளில் நம் குலத்துப் பெருமக்கள் தொடங்கியுள்ள பள்ளிகள் உயர்நிலைக் கல்வி வரை உள்ள துன்பங்களை ஓரளவு தீர்க்கின்றன. ஆனால், கல்லூரிப் படிப்பை எண்ணுகின்ற பொழுது நமக்கு ஏற்படுகின்ற மலைப்பு மலையாகவே தோன்றுகின்றது.

இந்த மலைப்பை, நம் மாணவச் செல்வங்கள் படுகின்ற துயரை, நீக்குவது உலகெலாம் வாழ அறம் செய்யும் நம் குலத்துப் பெரு மக்களுக்குப் பெரியதில்லை; அரியதில்லை.

அடுத்த கல்வி ஆண்டுமுதல் கலைக் கல்லூரி ஒன்றினைச் சென்னை மாநகரில் தொடங்குவதற்கு, நம் மரபுப் பெருமக்கள் முன்வருவார்கள் என்றும், நமது சங்கங்கள் முழு அளவில் அந் நன்முயற்சிக்கு ஆதரவு தரும் என்றும் நம்புகின்றோம்.

ஆலயத் திருப்பணி, அன்ன சத்திரம்
கல்விச் சாலைகள், கலைதெரி கழகம்
மருத்துவ மனைகள், மாணவர் விடுதி
ஆகிய பலவித அறப்பணி களுக்கே
வாரி வழங்கும் வண்மை யாளராம்
நாட்டுக் கோட்டை நகரச் செட்டிமார்
தம்முடைத் தாயகம் தமிழ்நா டெங்கும்
பற்பல அறங்களைப் பாலிப்ப தோடு
பாரத நாட்டில் பல்வே றிடங்களில்
நல்லறப் பணிகளை நடத்து கின்றார்கள்.

நாமக்கல் கவிஞர். வெ. இராமலிங்கம் பிள்ளை.



கண்ணாய், ஒளியாய், கற்கண்டாய், தேன்பாகாய், பொன்னும் பொருளும் தருபவராய், பூதலம் வணங்கும் அருள்சுடராய் விளங்குகின்றவர் திருப்பதி வேங்கடாசலபதி. அப் பெருந் தெய்வத்தின் திருஉருவத்தினை இந்த இதழ் அட்டையில் மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். அவர் புகழ் கூறும் பாமலரை அவர் பொற்பாதங்களில் பக்தியுடன் சூட்டிப் பணிகின்றோம்.

பாடலாசிரியர்—**புலவர் நாகசண்முகம்**

இசை அமைத்து, எச். எம். வி. இசைத்தட்டில் பாடியவர்

இசைத் தென்றல் டி. எம். சௌந்தரராஜன்


மலைமேலே வாழுகின்ற மாதவா!
மலர்வாயில் சிரிப்பரும்ப
மலர்க்கரத்தில் அருள் விளங்க
மலர்ப்பாதம் நொந்தாலும்

எமைக்காக்க வந்திடுவாய்
மலைமேலே வாழுகின்ற மாதவா!

மக்கள் குறைதீர மனம்இரங்கும் தூயவா!
சங்கு சக்கரம் கொண்டவன் நீயேஅல்லவா!

சங்கடந் தீர்த்து எமைஆளும் வல்லவா!
மங்கல மணிமுழங்கும் கோயிலிலே
மணியாரம் விளங்கநிற்கும் திருமார்பா!
அன்பு கொண்டு உனைவணங்கும் பக்தர்களை
அருகிருந்து காப்பாற்றும் மலர்ப்பாதா!

தொழிலதிபரான தொழிலாளர் தலைவர்



கலைத் தந்தை கருமுத்து தியாகராயச் செட்டியார் அவர்கள்தான்

கலைத் தந்தை அவர்கள் இலங்கையில் வாழ்ந்தபோது தொழிலாளர் தலைவராக விளங்கினார்கள். கூலிகள் என்ற பெயரில் மிகவும் கேவலமாக மதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் நிலை உயர்வதற்கு அவர்கள் பெருங் காரணமாக விளங்கினார்கள்.

கலைத் தந்தை பற்றிய கட்டுரை, பக்கம் 9-ல் இடம் பெற்றுள்ளது.

கருத்துக் கோவை

குழந்தைகளுக்குத் தாய் உணவு அளிப்பாள். உலகு அனைத்திற்கும் தாயாகவும் தந்தையாகவும் விளங்கி, குழந்தைகளாகிற எல்லாப் பிராணிகளுக்கும் பரிபூர்ண உணவை ஊட்டிக் கொண்டு அருள்பாலித்து வரும் அன்ன பூர்ணியின் அருளால் பரிசுத்தமான கங்கையில் நீராடி, புண்ணியத்தை அடைந்து உள்ளம் பூரித்து வரும் பக்த கோடிகளுக்கு உணவு அளித்து வருவது, நகரத்தார் செய்து வரும் புண்ணியங்களில் பெரும் புண்ணியமாகும். நகரத்தார்கள் இயற்கையாகவே அறத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மேன்மேலும் அவர்கள் புண்ணியத்தைப் பெற, சிவத் தொண்டிலும் அற வளர்ச்சியிலும் நகரத்தார் சமூகம் பரிபூரணமாக ஈடுபட்டு, அம்மையும் அப்பனுமான ஸ்ரீ விசாலாட்சி சமேத விச்வநாதர் ஸ்ரீ அன்ன பூர்ணி இவர்களது அருளுக்குப் பாத்திரமாகட்டும்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் ஆசியுரை.

தமிழ்ப் பண்பாட்டின் அணிகலனாக — தமிழகத்தின் உயிர் நாடியாக—தமிழ்க் கலைகளை வளர்க்கும் ஒப்பற்ற தலைவர்களாக—கனவிலும் நனவிலும் சைவமும் தமிழும் இந்திய நாடெங்கும் மட்டுமின்றி, கடல்கடந்தும் பரப்பி வரும் நகரத்தார்கள் பன்னெடு நாட்கள் வாழ்க !

தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

தமிழும் சைவமும் தழைத்தினி தோங்கவே
திரைகட லோடித் தேடிய செல்வம்
அள்ளி வழங்கி அறவிலை செய்த
தனவ ணிகரின் சரித்திரப் புகழை
உலகெலாம் அறியும்; உத்தம வணிகர்
சத்திரம் பலப்பல சதுருடன் எழுப்பி
அந்தணர் மாணவர் ஆண்டி பரதேசிகள்
அனாதைகள் யாவரும் அருந்தி வாழச்
செய்யும் பணிகளின் சிறப்பென் சொல்வோம்.

சுவாமி சுத்தானந்த பாரதியார்.

வேல் வழிபாட்டினை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்ட நகரத்தார் பெருமக்கள், தாங்கள் சென்று வாணிகம் செய்த பகுதிகளிலெல்லாம் முருகனுக்குக் கோயில் எடுத்திருக்கிறார்கள். சிறப்பாக—இலங்கை, மலாய் நாடு, பர்மா ஆகிய பகுதிகளில் முருகனுக்குத் திருக்கோயில் எடுத்து வேல் வழிபாடு செய்து வந்திருக்கிறார்கள். கடல் கடந்து சென்று வாழ்வு சிறக்க வழி தேடிய இவர்கள், வாழ்வின் குறிக்கோளாகிய வழிபாட்டை மறவாமல் போற்றினார்கள் என்பதற்குத் தமிழ் வழங்காத இப் பிற நிலங்களில் இன்றும் நிலை பெற்றிருக்கும் இத்திருக் கோயில்கள் தக்க எடுத்துக் காட்டுக்களாகும். இப் பகுதிகளிலெல்லாம் சென்று பிறமொழி பேசும் மக்களொடு பழகுகின்ற காலத்திலும்கூட, ஆங்காங்கே உள்ள இத்திருக் கோயில்கள் என்னைக் கவர்ந்ததோடு, பிற செயல்களினால் இறை வழிபாட்டை மறந்திருந்த என்னை, முருகன் மறவாதிருக்கச் செய்த செயல் இன்றும் என் நெஞ்சை விட்டு நீங்காது நிற்கின்றது. அங்ஙனம் முருகனை நினைக்குமாறு இவர்கள் செய்த திருப்பணி என்றென்றும் வாழ்வதாக.

அ. ச. ஞானசம்பந்தம்.

நகரத்தார் அறச் செயல்களுக்குள் மிகச் சிறந்தவை காசிமா நகரில் ஸ்ரீ விசுவநாதருக்கு நடைபெற்றுவரும் அபிஷேக ஆராதனைகள் ஆகும். நகரத்தாருடைய கட்டளையாக அதிகாலையில் விசுவரூப பூஜையும், உச்சிக் கால பூஜையும், இரவு அர்த்த சாம பூஜையும் ஒரு நூற்றாண்டு காலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஒரு சமயம் காசிமா நகர் வந்து ஸ்ரீ விசுவேசரைத் தரிசித்து இன்புற்ற மைசூர் மகாராஜா அர்த்த சாமத்துப் பூஜைக் கட்டளையைத் தாம் ஏற்று நடத்த விருப்பதாகவும், அதை வழங்க வேண்டும் என்றும் நகரத்தார்களைக் கேட்டாராம். அந்தத் திருத் தொண்டை உயிரெனப் போற்றி வரும் சிவநேயச் செல்வர்களாகிய நகரத்தார் அதை விட்டுவிட மனம் இசையவில்லை.

கி. வா. ஜகந்நாதன்.

வீட்டினிற் செட்டாக வாழ்ந்திடினும், திருப்பணிகளில் அளவு கடந்து செலவு செய்யும் தன்மை நகரத்தாரிடம் நிலவிவருகிறது. 'செல்வன் கழலேந்தும் செல்வமே செல்வம் என்னும் அருள் மொழியின் பொருளை உணர்ந்து நகரத்தார் பெருமக்கள் அறப்பணி ஆற்றி அனைவரின் போற்றுதலுக்கும் உரியராக இருந்து வருகின்றனர்'. இதனாலேயே, 'குலமுயர, நகருயர, நாடுயர உழைக்கின்றார்' என்று இவர்களைப் பாட்டுக் கொரு புலவன் பாரதி பாடியுள்ளான்.

'சோமலெ'


கருத்துக் கோவையில் இடம்பெற்றுள்ள முத்துக்கள் ஸ்ரீ காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலரிலிருந்து தொகுக்கப் பெற்றவை.



தேவகோட்டை எஸ். எம். பி. எல் எஸ். பி. எஸ். எம். சோமசுந்தரம் செட்டியார் மகன் திருவளர் செல்வன் வள்ளியப்பனுக்கும் மேற்படி நகர் ஏ. வி. கே. எம். ஆவிச்சிச் செட்டியார் மகள் திருவளர் செல்வி சொர்ணவல்லிக்கும் 2-7-69ம் நாள் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.


தேவகோட்டை உ. மு. சுப. லெ. அழ. அழகப்ப செட்டியார் மகன் திருவளர் செல்வன் மெய்யப்பனுக்கும், மேற்படி நகர் பழ. வெ. இராம. லெ. குப. சுப்பிரமணியன் செட்டியார் மகள் திருவளர் செல்வி மீனாட்சிக்கும் சௌமிய ஆண்டு ஆனித்திங்கள் நாலாம்நாள் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.






ஆத்தங்குடி ராம. ஆ. ராம ஆறுமுகம் செட்டியார் மகன் திருவளர் செல்வன் பழநியப்பன் என்ற மணிக்கும், கோனாபட்டு N. M. NK. நாகப்ப செட்டியார் மகள் திருவளர் செல்வி பார்வதிக்கும் 2-7-69ல் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.

காரைக்குடி KT. சுப்பையா செட்டியார் மகன் திருவளர் செல்வன் கருப்பையாவிற்கும், ராயவரம் RM. K. RM. குமரப்ப செட்டியார் மகள் திருவளர் செல்வி வள்ளியம்மைக்கும் 14-6-69ம் நாள் மணமகள் இல்லத்தில் திருமணம் சீரோடும் சிறப்போடும் நடைபெற்றது.



தொழில் வளர்த்த தோன்றல்



கருமுத்து - தியாகராசச் செட்டியார்

டாக்டர் சுப. அண்ணாமலை, எம்.ஏ., எம். லிட்., பி.எச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

கலைநலம் தேர்ந்த கருத்தாளர், கல்வி வளர்க்கும் திருவாளர், பொருளியல் வல்ல முதலாளர், தமிழ் உணர்ந்த கொடையாளர், நூலாய்ந்த புலனாளர், தொழில் வளர்த்த தோன்றல்—இத்துணைச் சிறப்புக்களுள் ஒவ்வொன்றே எய்திய செல்வரைத் தமிழகம் அறியும். ஆனால் இவை அனைத்தும் ஒருங்கே உடைய பெருமை ஒருவருக்கே உண்டு.

அவர்தாம் ஆத்திக்காட்டுத் தெற்கூர் உவந்து அளித்த செல்வர் தியாகராசர். உழைப்பால் உருவாகித் தென்னகத்தின் தொழில் மன்னராக விளங்கும் அவர், இளமை தொட்டே தொழிலாளருடன் தோழமை பூண்டார். செய்தியிதழ் நடத்தும் தொழிலைப் பயின்றார். தொழிலாளர்க்காக அரசுடன் வாதாடும் இயக்கங்களை நடத்தினார். தொழிலாளர் தலைவராகப் பல்லாண்டுகள் இருந்து அவர்களின் குறைகளைத் தீர்த்தார்.

இலங்கையில் தோட்டத்தொழிலாளர் பட்ட இன்னல்கள் ஏராளம். ஏற்ற அவமானம் பொல்லாதது; வெளியே சொல்லாதது. விலங்குகளுக்குப் போடுவதை ஒப்ப அவர்கட்குச் சூடு போட்டனர். இக் கொடுமையைத் தியாகராசனார் இயக்கம் நடத்தி அகற்றினார்.

இன்று அவரது ஆட்சியில் இருக்கும் நூலாலைகளில் உழைக்கும் தொழிலாளர்க்கு ஒரு குறையும் இல்லாதவாறு கண்ணுங் கருத்துமாகப் பேணிவருகின்றார். மதுரைப் பசுமலையிலும் பரவையிலும் எழில் தவழும் தொழிலாளர் குடியிருப்புக்களை அமைத்துள்ளார். இளையோர் கல்வி பயில அங்குப் பள்ளிகள் உண்டு. வளர்ந்தோர் அறிவுபெற அங்கு நூலகம் உண்டு. வாழ்வு செம்மைபெற அங்குச் சமயச் சொற்பொழிவுகள் உண்டு.

இம்மட்டோ? தொழிலாளர்க்காகக் கூட்டுறவுப் பண்டசாலை, மருத்துவமனை, வாழ்நாட் காப்புறுதி முதலிய பல வசதிகளை அளித்துள்ளார்.

தென்னாட்டில் ஏராளமான நூற்பாலை, நெசவாலைகளை நிறு

விச் செம்மையுறப் பேணித் திறமையாகத் தொழில் வளர்க்கும் பெருமை கருமுத்துத் தியாகராசருக்கே உரியது. அதைப் போலத் தமிழகத்தின் பல ஊர்களிலும் 14 கல்வி நிலையங்களைத் தனியொருவராகவே தோற்றுவித்துக் கோடிக் கணக்கில் வெண்பொற் காசுகளை வழங்கிக் கல்வி வளர்க்கும் பெருமையும் இவர் ஒருவரையே சாரும். தொழில் வளத்தால் பெருகிவரும் செல்வத்தைக் கொண்டு, கல்விச் செல்வத்தை இளைஞர்க்கெல்லாம் வழங்கிவரும் இவரது எதிர்கால நோக்கையும் மக்கள் நலனில் இவர் காட்டும் ஆர்வத்தையும் அறிஞர் எல்லாம் பாராட்டுகின்றனர். இவர் புரந்துவரும் கலைக் கல்லூரியில் உயர் கல்வி பெற்ற மாணவர்கள் இன்று நாடெங்கும் உயர்பதவியில் உள்ளனர். அவர்களுள் அமைச்சர்களும் தியாகராசனார் புகழைத் திகழச் செய்கின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

தொழில் பல வளர்த்துக் கல்வி நிலையங்களைப் புரந்து, நாட்டின் வறுமையையும் அறியாமையையும் போக்க அயராது உழைத்து வரும் தியாகராசனார், நுட்பமான கலையுணர்வும், தமக்கெனத் தனியாகக் கலைச்சுவையும் வாய்ந்தவர் என்பது வியப்பிற்குரிய உண்மை. நூலாலைகளுக்கும், நூல் பயிலும் சாலைகளுக்கும் தொழிற் கூடங்களுக்கும் அவர் கட்டியுள்ள எழிற்கூடங்கள் தனிக் கலையழகு வாய்ந்தவை; அவரது தனிக் கலைச் சுவைக்கு ஏற்ப அமைந்தவை. கட்டிடக் கலையில் தனிப் பாணியை அமைத்தவர் அவர். பார்த்த அளவில், 'தியாகராசர் கட்டிய கட்டிடம்' என அறிந்தோர் கூறும் வண்ணம் சில கலை முத்திரைகள் அவரது கட்டிடப் பாணியில் உண்டு. கட்டிடம் ஒன்றோ? எதிலும் அவரது முத்திரை செம்மை; செம்மையே. சிற்பமும் ஓவியமும் சிலப்பதிகாரக் காவியமும் அவர் சிறந்தெடுத்துப் போற்றும் கலைகள். தமிழிலக்கியக் கலையில் அவருக்கு உள்ள ஆர்வமும் அன்பும் அளவிடப்படுவன அல்ல. இளமை தொட்டு இலங்கை யாழ்ப்பாணத் தமிழ்ப் புலவர்களுடன் பழகி, இலக்கியச் சுவை தேர்ந்தார். பண்டித மணி, முதுபெரும் புலவர், பெரும் பேராசிரியர், மு. கதிரேசச் செட்டியார்; மும்மொழி வித்தகர் மறைமலை அடிகளார்; மதுரைக் கணக்காயர், நாவலர், முதற்றமிழ்க் காவலர் சோமசுந்தரபாரதியார்; உரைவேந்தர், சைவ சித்தாந்தக் கரை கண்ட ஔவை துரைசாமிப் பிள்ளை முதலிய புலவர் திலகங்களுடன் புலமை நட்புப் பூண்டு, உவந்தும் உறழ்ந்தும் உரையாடித் தமிழ் நலம் துய்த்து இன்புற்றார். ஏராளமான தொழில் நிறுவனங்களை நடத்திக் கல்வி நிலையங்களைப் பேணி, பொறியாளர், ஆலைக் கணக்காளர், வழக்காளர், வணிகத் தாளாளர், பணியக மேலாளர் ஆகியோருடன் பேசி, நாள் எல்லாம் இரவெல்லாம் வரைவின்றி உழைக்கும் அவர், பழந்தமிழ்ச் சங்க நூல்களை மனப்பாடமாக இன்றும் கூறுகிறார்: அவற்றுக்கு நயமும் சொல்கின்றார் என்றால், வியக்காமல் இருக்க இயலுமா?

இவ்வாறு பல துறையிலும் முறை தோய்ந்த பட்டறிவும், செம்மையும், திறமையும் பெற்ற பிறிதொரு செல்வரைக் காண்பது அரிதே ஆகும்.

தமிழ்நாட்டு நாளிதழ்த் துறையில் அவர் மிக்க துணிவோடு ஒரு புரட்சியினைச் செய்தார். அதனால் மிகுதியான பொருளிழப்பு வந்

து. அதைத் தாங்கிக்கொண்டு, கொள்கையில் விடாப்பிடியுடன் பதினேழு ஆண்டுகளுக்கு மேல் நல்ல தமிழில் "தமிழ்நாடு" நாளிதழை நடத்தி வந்தார். தமிழுக்காக வேறெவரும் செய்யாத பெரிய முயற்சி இது. 'கைக்கு வந்ததெல்லாம் எழுத்து; அதுவே மக்களுக்குப் புரியும்' என்று கூறிவந்தவர்கள் எல்லாம் மருளும்படி எளிய செம்மையான தமிழில் நாளிதழ் நடத்தி, நல்ல தமிழ்ச் சொற்களை மக்கள் வழக்காக்கினார். "தமிழ்நாட்டின்" பணி, நாளிதழ்களின் வரலாற்றில் மறைக்க முடியாத இடத்தைப் பெறுவதாகும்.

தியாகராசனார் அவர்களின் தமிழ் ஆர்வம் நாளிதழ் நடத்துவதுடன் அமையவில்லை. அருமையாய் வளர்த்துவரும் தியாகராசர் கல்லூரியில், எல்லா வகுப்புக்களிலும் மாணவர்கள் சிறப்புத் தமிழ் கற்க ஏற்பாடு செய்தார். பெரும் பொருட் செலவில் நல்லாசிரியர்களைத் தெரிந்து, தமிழ்த்துறையில் அமர்த்தினார். இன்றளவும் இக் கல்லூரி ஒரு தமிழ்ச் சங்கமேபோல அமைந்து, முதுகலை வகுப்பும் சென்ற பதினோராண்டுகளாக நடத்தி வருகின்றது என்றால் தியாகராசரின் தாங்கரும் தமிழ்ப் பற்றே அதன் வாயில். தமிழ் மட்டுமின்றி, மற்றும் நான்கு துறைகளிலும் இங்கு முதுகலை வகுப்புக்கள் நடக்கின்றன.

கலைக் கல்லூரி ஒன்றோ? பொறியியற் கல்லூரியும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும் நிறுவி, மதுரையில் பல்கலைக் கழகம் அமைக்கும் சூழ்நிலையை உண்டாக்கியவர் வள்ளல் தியாகராசரே. 1944 ஆம் ஆண்டில் அவர் தியாகராசர் அறநிலயத்தைத் தோற்றுவித்தார். அதன் ஆட்சியில் மேற்கூறிய மூன்று கல்லூரிகளையும் பல பள்ளிகளையும் நிறுவி, இன்றளவும் இரண்டரைக் கோடி வெண்பொற் காசுகளுக்குமேல் வாரி வழங்கி, அவற்றை நடத்தி வருகின்றார். மதுரையில் மட்டுமோ, தமிழகத்துப் பல ஊர்களிலும் கேரளத்திலும் இவர் கல்வி விளக்கினை ஏற்றிவைத்தார். சேலமும் திருச்சூரும் இவரால் பல தொழில் நுட்பப் பள்ளிகளைப் பெற்றன. தொழில்களை நிருவகிக்கும் மேலாளர்களைப் பயிற்றுவிக்கும் கல்வி நிலையம் ஒன்றை (Thiagarajar School of Management) மதுரையில் நடத்துகின்றார்.

இவை அன்றித் தியாகராசனார் தாம் பிறந்த ஆத்திக்காட்டுத் தெற்கூரில் இளங்குருளையரும் இள நங்கையரும் தனித் தனிக் கல்வி பயிலும் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டினை நிறுவிப் புரந்து வருகின்றார். அவை அவருடைய அருமை வாழ்க்கைத் துணைவியார், அமரர் விசாலாட்சி ஆச்சி திருப் பெயரால் வழங்குகின்றன. மிகு இளஞ்சிறார் பயிலும் வளர்ப்புப் பள்ளியும் தெற்கூரில் ஏற்படுத்தியுள்ளார். கோனாபட்டுச் சரசுவதி உயர்நிலைப் பள்ளி இவரது தண்ணிழலில் வளர்கிறது. மதுரையில் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளும் பாண்டியராசபுரத்தில் ஓர் உயர் பள்ளியும் மணப்பாறையில் ஓர் உயர்பள்ளியும் நடத்தி வருகின்றார்.

இவ்வாறு தனியொரு மனிதராய்ப் பதினான்கு கல்வி நிலையங்களைச் செம்மையுறப் பேணி வருபவர், தமிழகத்தின் வரலாற்றிலேயே வேறு ஒருவரும் இல்லை. வளர்ப்புப் பள்ளி முதல் பட்டப் பின் படிப்பு வரை இளைஞர் கல்வியின் படிநிலைதோறும் கருத்துச் செலுத்தி, அறிவு நலத்தை அள்ளி வழங்கும் தியாகராசரைச் கல்விக் குரிசில், கலைத் தந்தை

என்று கூறுவது சாலவும் பொருந்தும்.

இவரது கல்விக் கொடைக்கு ஊற்றாக இருப்பவை, இவர் மதி நுட்பத்தாலும் அயரா உழைப்பாலும் வளர்ந்துவரும் தொழில் நிலையங்களே. இவற்றிற்கு எல்லாம் தாய், எந்நாட்டவர்க்கும் அன்னையாய்த் தென்னாட்டவர்க்குத் தனிப்பெருந் தெய்வமாய் விளங்கும மீனாட்சியின் திருப்பெயரால் மதுரையில் திகழும் ஆலையே. இதனைத் தியாகராசனார் 1924ஆம் ஆண்டில் நிறுவினார். மலைபோல் வந்த இடர்களையெல்லாம தம் உலையா உறுதியால் மண்துகள் ஆக்கி இதனை வளர்த்தார். இதிலிருந்து கிளைத்த பல நூற்பாலைகளுள், பரவை என்னும் இடத்தில் அமைந்த ஆலை புதுவகையான கட்டிட அமைப்பும் குளிர் சாதன வசதியும் புதுமையான நூற்புப் பொறிகளும் உடையது. செட்டியார் அவர்கள் நூலாலைத் தொழிலை விரைந்து, திறமையுடன் வளர்த்தமைக்கு, இப்பொழுது அவர்களது ஆட்சியில், மொத்தம் ஐந்து இலட்சம் கதிர்களும் இரண்டாயிரம் தறிகளும் கொண்ட 16 ஆலைகள் இருப்பதே சான்று. இதனால் தென்னாட்டு ஆலைத் தொழிலில் இவர்கள் ஒப்பாரும் மிக்காரும் இன்றித் தலைமையிடம் பெறுவதுடன் வணிகக் காந்தமாகவும் விளங்குகின்றார்கள். மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோவை முதலிய தமிழ் மாவட்டங்களும் கேரளமும் இவர்களால் தொழில் நலம் பெற்றுள்ளன. இவற்றுள் மதுரையே இவர்களால் மிகுநலம் பெற்றது. மதுரை நகரைச் சூழ்ந்த எல்லைகளில் எல்லாம் அமைந்த இவர்களின் ஆலைகள், பல்லாயிரம் தொழிலாளரை வாழ்விக்கின்றன. மதுரைக்கு அருகேயும் தனுக்கு என்னுமிடத்திலும் செட்டியார் அவர்கள் சர்க்கரை ஆலைகள் நடத்துகின்றார்கள். பஞ்சு அரைக்கும் அறைவை ஆலைகள் இவர்க்கு உரியனவாகப் பல ஊர்களில் உள்ளன.

சென்னையில் புகழ் மிகு பி. ஆர். அன்ட் சன்ஸ் நிறுவனத்தையும் இவர்கள் ஏற்றுள்ளார்கள். இது இவர்களின் தொழில் திறனுக்கு ஓர் சான்று. கைக்கடிகாரங்கள், நுண்ணிய அளவைக் கருவிகள், கலைத்திறன் பொருந்திய அழகிய வேலைப்பாடுகள் கொண்ட வெள்ளி முதலிய ஆபரணங்கள், பலநுகர் பொருட்களின் விற்பனையில் ஈடுபட்டுள்ளது இந்நிறுவனம். உதகமண்டலத்திலும், லண்டனிலும் உள்ள இதன் கிளைகள் இந்நிறுவனத்தின் சிறப்பைக் கூறுகின்றன.

நகரத்தார்க்கு வழிவழி உரிமையான பாங்குத் தொழிலையும் இவர்கள் மறக்கவில்லை. தென்பாங்கில் கிளைகள் பரப்பி வளர்ந்துவரும் மதுரைப் பாங்கு இவர்களுடையதே.

தியாகராசனார் தொழிலிலும் கலையிலும் சிறந்து விளங்குவது போலவே பண்பாட்டிலும் சொல் வன்மையிலும் மேம்பட்டுத் திகழ்கின்றார். தமிழையும் ஆங்கிலத்தையும் செம்மையாக ஒலித்துப் பேசுவது அவர் வழக்கம். சொற்களைப் பயனின்றி வழங்கமாட்டார். அளந்து, பயன் தூக்கி, இசை நிறுவி, நயம்படப் பேசுவார். வந்த சொல் வாராமல், கூறியது கூறாமல், குறையின்றி நிறைவு அமையப் பேசுவார். எழுதுவதும் இவ்வாறே. இளமைப் பருவத்தில், இலங்கையில் தொழிலாளர் இயக்கம் நடத்தத் தொடங்கிய 1912 ஆண்டிலிருந்து இன்றளவும் அரசினர்க்கு இவர் தீட்டிய தீர்மானங்களும்,

விண்ணப்ப உரைகளும், கருத்துரைகளும், இடித்துரைகளும் எண்ணில் அடங்காதவை. அவை தெளிவான சிந்தனையும் செந்தமிழ் நடையும், சீரிய கூரிய சொல்லாட்சியும் உடையவை.

எளிய வாழ்க்கை, ஏற்றமான சிந்தனை; கலையில் ஈடுபாடு, கல்வியில் கருத்து; திருவாசகத்தில் நெஞ்சுருகும் தோய்வு, திருக்குறளை எழுத்தெண்ணிக் கருத்தெண்ணிக் கற்ற உறுதி; மொழி காக்கும் துணிவு, முறை தெரிந்துரைக்கும் மூதறிவு—இவ்வளவும் அயராத உழைப்போடு, தொழில் வளர்க்கும் மதிநலத்தோடு சேர்ந்தால், அதற்குப் பெயர், கருமுத்துத் தியாகராசர்.

இன்று எழுபத்தாறு வயது கொண்ட இளைஞர் இவர். நிமிர்ந்த நடை, விரிந்த பார்வை. அப்பார்வையில், தொழில் நலம் பெருகிச் செல்வம் கொழித்துத் தலை நிமிர்ந்து வாழும் தமிழகத்தை, கலைமணம் நிரம்பி, இலக்கிய அணி புதிது புனைந்து, கல்வித்துறை, வாழ்க்கைத்துறை, அரசுத்துறை எல்லாவற்றிலும் செங்கோல் ஒச்சிப் புன்னகை பூக்கும் தமிழன்னையை ஏந்தியவாறு இந்த இளைஞர் நடக்கின்றார். தமிழகமெங்கும், இந்தியாவெங்கும் சுற்றி வருகிறார். இரவைப் பகலாக்கி மண்ணைப் பொன்னாக்குகின்றார். பஞ்சை நூலாக்கிப் பஞ்சையை விரட்டுகின்றார். இளைஞரை அறிஞராக்கி இணையற்ற இந்தியாவை உருவாக்குகின்றார்.

வாழ்க அவர் தொழில் வளம்; வளர்க அவர் வாழ்நாள்.

●

கவிதைப் பூங்கா

வீரம்

[செட்டிநாடு ஆர்ட்ஸ் அகாடமி துவக்க விழாவில் நவரசக் கவியரங்கம் நிகழ்ந்தது. கவியரசு கண்ணதாசன் அவர்கள் தலைமை ஏற்றார்கள். அந்த அரங்கத்தில் வீரச் சுவை குறித்து நம் இதழாசிரியர் புலவர் நாகசண்முகம் அவர்கள் அரங்கேற்றிய கவிதை கீழே இடம் பெற்றுள்ளது.]

கடின நடைக் கவிதை என்ற வெயிலால்
கவிஉலகம் வறண்டிருந்த போது
எளிய நடைக் கவிதை மழைபொழிந்து
எழில்சேர்த்த கவியரசே வணக்கம்!
அரசருக்கு அமைச்சரென
அருகிருக்கும் கவிக்குலத்தீர் வணக்கம்!
புவிபோற்ற வாழ்ந்து இன்றும் வாழும்
நகரத்துப் புள்ளிகட்கு வணக்கம் - சென்னை
நகரத்துப் புள்ளிகட்கும் வணக்கம்
பறையறைந்து முரசொலிக்கப்
படைகொண்டு சென்று
பகைமன்னர் முடிவாங்கிப்
பத்தினியார் நாண்வாங்கிப்
புன்னகையை முகத்தேந்திப்
பூரிப்பை உளத்தேந்திக் -
கொள்ளுகின்ற வெற்றிமட்டும் வெற்றி அன்று.
வெற்றிஎன்ற பொதுஉலகில் இதுவும் ஒன்று!

செயல்தோறும் காணுகின்ற வெற்றிக் கெல்லாம்
வீரமொன்றே காரணமாம், அதற்கு ஒன்று சொல்வேன்.
வெள்ளை நிறத் தோலுடையான் - நமக்கு
வேட்டுவைக்கப் பீரங்கிகள் பலஉடையான்
கோட்டைகளும் மிகஉடையான்
கொலையஞ்சா மனமுடையான்
அன்னவனைக் - கருமனத்து வெள்ளையனைக்
காந்தி அண்ணல் புன்னகையால் எதிர்த்தார்
புறம்கண்டார் வெற்றிகண்டார்.
வேந்தர்அவர் புன்னகையில் வீரமன்றோ வாழ்கிறது ?
சொல்தேடி அலைகின்ற கவிஉலகில்
சொல், தேடி அலைகின்ற பெட்புடையார்
விருத்தத்தால் நலம்தந்தார் கம்பர்
விரும்புகின்ற பாவெல்லாம் தருகின்றார் கவியரசர்
வானம், அங்கே விளையாடும் மேகக்கூட்டம்
வானவில், அதில்காணும் வண்ணக் கோலம்
நிலமங்கை - அவள் தந்த இயற்கைப் பிள்ளை
நிலவு ஞாயிறு மின்மினிகள்
வண்ண மலர்க்கூட்டம் மாதர் விழியாட்டம்
-இவையெல்லாம்

கவிஞர் - கைபட்டால் போதும்
கவியாக மாறிவிடும்;
சொல்பட்டால் போதும் சுவைஅங்குச் சேர்ந்துவிடும்.
தத்துவத்தைச்சொல்வார்,யோகிஎன நாம்நினைப்போம்
சரசமிகு காதலினைச் சொல்லும் போது
காதல் மன்னர் இவர்என்று முடிவுசெய்வோம்
அதுவும் பொய்யே !
தாலாட்டுப் பாடித் தாயாக மாறி
ஐயாவை ஆயாளைப் பிள்ளையாக்கி
அற்புதங்கள் செய்திடுவார் என்ன விந்தை !
மாயமிகு கண்ணனுக்குத் தாசன் அன்றோ
மாயங்கள் செய்கின்றார், இதுதான் உண்மை.
இம்மகனைப் பெறுவதற்கு அன்னை
என்னதவம் செய்தாளோ ? இல்லை! இல்லை!

தவமதனை நாம்செய்தோம், அதன்
தரமதனைத் தாய் அறிந்தார்,
வரமாகக் கவிஅரசை நமக்குத் தந்தார்,
வாழ்க அவர்!
பானைச் சோற்றுக்குப் பதம் ஒன்று என்று சொல்வார்
வீரத்தைக்காண்பதற்கு இருபதத்தை நாம் காண்போம்
பிள்ளைக்குப் பெண்ணிற்குப்
பேரின்ப மனைவிக்கு
வைரமாய் இழைப்பார்கள்
வாழ்வுதந்த அன்னைக்குப் -
போனால் போகட்டும் - உயிர்
போனாலும் பின் நமக்கே ஆகட்டும்
என்று எண்ணி
ஒற்றைவடம் சங்கிலியில்
ஒன்று செய்து கொடுப்பார்கள்
இத்தகையார் எண்ணற்றோர்
இவ்வுலகில் வாழுகின்றோர் - ஆனால்
ஐயனுக்கும் அம்பிகைக்கும்
அப்பனுக்குப் பாடம்சொன்ன சுப்பனுக்கும்
அவன் அண்ணன் தொந்திக் கணபதிக்கும்
வைரமுடி, வேல் - மாலை
வகைவகையாய் செய்தவர்கள்
தமக்குத் துயர்வரினும்
தருமத்தைக் காத்தவர்கள்
நம்மவர்கள் அன்றோ?
ஆலயங்கள் - கோபுரங்கள்
அழகுமணித் தேர்கள்
ஆலயத்து மணிஓசை
கல்விதரும் கழகங்கள்
காக்கின்ற தெய்வங்கள்
இவைஅனைத்தும் அறஉலகில் நாம்பெற்ற
வெற்றி மணிச்சரங்கள்!
வீரமிகு முத்திரைகள்!
விருந்தென்றால் இவர்வைக்கும்

விருந்தே விருந்தென்று
வீட்டாரும் நாட்டாரும்
விரும்பிமிகப் பேசுகின்றார்.
விருந்து மிகஉண்டார், வயிறுகெட்டு
மருந்து உண்பார்.
மருந்து குடிப்பதற்கும் நாம்
விருந்தன்றோ வைக்கின்றோம்!
பேசாமல் என்னசெய்வார்?
நண்பர் ஒருவரொடு
நம் ஊர்க்குச் சென்றிருந்தேன்.
விழா ஒன்றில் கலந்துகொண்டோம்
விருந்துண்டோம்.
சென்னை நகர்என்றால்,
இலைஒன்று போடுகின்ற இடமீதில்
எட்டுப்பேர் குடியிருப்பார்
என்று சொன்னார் அந்த நண்பர்.
இதயம் மிகச் சிலிர்த்து நின்றேன்.
பதினாறு கறிசமைத்துப்
பாசத்தை உடன்குழைத்து
எட்டி எடுக்க இடுகின்ற இலைதனிலே
விருந்தோம்பும் பண்பினிலே
வீரமதை நான்கண்டேன்
கவியரசர் சந்நிதியில்
கவியமைச்சர் முன்னிலையில்
வீரமதைச் சொல்லுதற்குச்
சிறிது நேரமதைத் தந்த
செட்டிநாடு கலைமன்றம்
சிறந்தோங்க வாழ்த்தி
அன்போடு நன்றி சொல்லி
அமைகின்றேன். வணக்கம்.

காகிதம் நனைந்தது!

சே. இளங்கோவன், (நாச்சியாபுரம்)
(பெங்களூரில் எம்.எஸ்சி., பயின்று வருகிறார்)

அழகான கவிதை ஒன்று எழுதிடவே
அன்றொரு நாள் ஆர்வமுடன் காகிதத்தில்
'உலகத்தில் சாதி' என்று ஓர்
'உயர்வான' தலைப்புதனைக் கொடுத்தேன்
சோதனையாய் ஒன்றும் எழுதத் தோன்றவில்லை
வேதனையால் - காகிதத்தைக் கசக்கலானேன்.
"கசக்காதே" என்றுஒரு குரல் கேட்கக்
கலங்கி நின்றேன் காகிதமா பேசுவது!
இது என்ன விந்தை என்று எண்ணிக்
காகிதமே நீயா பேசியது என்றுகேட்டேன்.
காகிதமே பேசிற்று கருத்ததனைக் கூறிற்று
உலகத்தில் சாதியினை எழுதுகின்ற உத்தமனே!
உரைத்திடுவேன் சிலஉண்மை கேட்டிடுவீர்.
"காகிதத்தில் சாதிஉண்டு கண்டீரோ!
பேதமிதைச் சொல்லுவது வேதமில்லை. நடைமுறையே
உயர்சாதிக் காகிதத்தைப் பணம் என்கிறார்
உயர்ந்ததில்லை அதைவிடவே என்று கூறி
அச்சாதிக் காகிதத்தைக் கண்டதுமே
ஆசைமிக்கார் கட்டிக் காக்கின்றார்
விலைபேசும் காகிதத்தை இவ்வுலகில்
தலைமீது தாங்குகிறார் என்ன விந்தை! - என்னைக்
கீழ்ச்சாதி என்று சொன்னார்.
குப்பை என்றார் - உண்மை என்றார்.
பிறப்பால் நாங்கள் ஓரிடமே.
பேதம் பெற்றோம் பின்னரையா!

பிறப்பால் ஒன்று ஆவீரோ!
பேசும் சொல்லால் நாணயத்தால்
பெருமைக்குரிய செயல்களினுல்
உழைப்பால் பணிவால் உயர்ந்திடுவீர்.
உண்மை இதுதான் அறிந்திடுவீர்.
என்று காகிதம் பேசிய வார்த்தைகள்
என்றும் இதயத்தில் நிலைத்தனவே.
கலங்கிய கண்களில் தோன்றிய துளிகள்
கசங்கிய காகிதத்தை நனைத்தனவே!

நன்று வாழ்க!

(அ. இராமு, இராயவரம்)

நகமும் சதையும்போல்
ரத்தினமும் பவளமும்போல்
தார் கெண்ட வாழைபோல்
நகரத்தார் வாழ்ந்ததாலே
நழுவி வந்த நற்பெயரோ
கல் கண்ட இடமெல்லாம்
நில் என்று சிலைகண்டு
சொல் வேதம் முழக்கிடுவார்
பல் முறையில் தருமங்கள்
நல் வழியில் செய்திடுவர் - நன்றுவாழ்க!

உ

சிவமயம்

அன்புள்ள ஆச்சிக்கு!

ஆறு. அழகப்பன்,
எம்.ஏ., எம்.லிட்.,
தமிழ் விரிவுரையாளர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர்.

செட்டிநாடு,
சௌமிய ஹு ஆனி மீ 27உ

அன்புள்ள செட்டிநாட்டு ஆச்சிக்குத் தம்பி அழகப்பன் எழுதிக் கொண்டது. இப்பவும் உபயக்ஷேமம். அவடத்தில் எல்லோருடைய க்ஷேமத்திற்கும் எழுத வேண்டியது. நான் தங்களுக்கு நீண்ட நாட்களாகக் கடுதாசி எழுத வேண்டும் என்று பிரியப்பட்டேன் தோதில்லை. இனியும் எழுதாமல் இருப்பது நல்லா இல்லை என்று எழுதினேன். இக் கடுதாசியில் எழுதியுள்ள சேதிகள் உங்களுக்குக் கட்டாயம் தெரிய வேண்டும். ஆனால் நீங்கள் படிக்கவில்லை; ஆதலால் செட்டிநாட்டுப் "பொண்டுகளின்" பெரிய படிப்பான எட்டாவது படித்த ஒரு பெண்ணைக் கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்க வேண்டியது. இதில் உள்ள விஷயங்கள் உங்களுக்கு மட்டும் எழுதியதில்லை. ஆத்தாள், அயித்தை, அப்பத்தாள், ஆயா, அம்மாமுண்டி, அண்ணமுண்டி, கொழுந்திகுமுண்டி முதலிய எல்லா செட்டிநாட்டுப் பொண்டுகளுக்கும் எழுதியது. அவர்களையும் கேட்கச் சொல்ல வேண்டியது. கல்யாணம், திருவிழா முதலியவைகளில் ஆச்சிமார்களைக் கண்டால் அடுத்த வீட்டு விஷயங்களை அதிகமாகப் பேசுகின்ற பேச்சுக்களோடு பேச்சாக இதனையும் காதில் போட்டு வைக்கவும். நானும் இதனை எழுதுவதற்கு முன்பு பல செட்டியார்களை எல்லாம் கலந்து இப்படி ஒன்று எழுதப் போகிறேன் என்று கூறினேன். அவர்கள் எழுத வேண்டிய கருத்துகளாகக் கூறியதையும் விடாமல் இதில் எழுதியிருக்கிறேன். பொதுவாக இக் கடுதாசி செட்டியார்களுடைய கருத்து என்று நீங்கள் ஏற்றுக் கொள்ளலாம்.

செட்டி நாட்டுப் பொண்டுகளின் வம்சாவழியைப் பற்றி நான் எழுதியா உங்களுக்குத் தெரிய வேண்டும்? கற்பரசி கண்ணகி, வாழ்வரசி ஆதிரை, பக்திச்செல்வி காரைக்கால் அம்மையார் வழியில் நீங்கள் வந்தவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே. நீங்கள் பாடிவரும் தாலாட்டுப் பாடல்களும், ஒப்பாரிப் பாடல்களும் உலகப் புகழ் பெற்றவைகள். கணவரின் நலத்தைவிட அதிகக் கவனம் கொண்டு நீங்கள் ஒரு நூலாம் படை கூட இல்லாமல் வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்வது கண்டு பிற இனத்தார்கள் மூக்கின்மேல் விரல் வைத்து இன்றும் அதிசயப்படுகிறார்கள். திருவள்ளுவர் எழுதிய விருந்தோம்பல் அதிகாரத்திற்கு எடுத்துக்காட்டாக விருந்தாளி நாளும் மகிழ விருந்

தோம்பல் செய்கிறீர்கள். உங்களுடைய தெய்வ பக்தியைக் கண்டு இறைவனே ஆச்சரியப்படுகிறான்! நீங்கள் வாழ்க்கையில் கடைப்பிடித்து வரும் சிக்கனம் தேசியத்திற்கு ஒரு சேமிப்பாக இருந்து வருகிறது. நீங்கள் முடைந்த தடுக்குகளையும், ஓலைப் பெட்டிகளையும் இரட்டை வீட்டுக்குள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைத்து பழுத்துப்போகாமல் சேலையைப் போட்டு மூடி வைக்கும் உங்களின் கலை கண்டு கண்டோர் வியக்குகிறார்கள். நம்முடைய பொருள்களைப் பிறர் தவறாகப் பயன்படுத்திவிடக் கூடாது என்று நினைத்து உடைந்து போகக்கூடிய கண்ணாடிச் சாமான்களில்கூடப் பேர்வெட்டிப் பொருள்களைப் பாதுகாக்கும் வழக்கம் ஆச்சிமார்களுக்கே உரியதல்லவா? இப்படி நான் எழுதிக்கொண்டே போகக்கூடிய பல சிறப்புகள் உங்களிடம் இருந்தாலும், உங்களிடம் குடி புகுந்துள்ள சில "குத்தங் குறைகளை" நான் எடுத்துச் சொன்னால் கோபிச்சுக்க மாட்டீர்கள் என்றே நினைக்கிறேன் அப்படி உங்களிடம் சில "குத்தங் குறைகள்" இருப்பதாகப் பலர் கருதுகின்றனர். அவை தனிப்பட்ட ஒருவனுடைய வளர்ச்சி, குடும்ப வளர்ச்சி, இன வளர்ச்சி ஆகியவற்றிற்கு முட்டுக் கட்டைகளாக இருப்பதால் அதை எடுத்துச் சொல்லலாமே என்று நினைத்துத்தான் எழுத நேர்ந்தது. செட்டிநாட்டுப் பெண்கள் "சமத்திகள்" என்று பெயர் பெற்றவர்கள். ஆதலால் இங்கே சொல்லப்படும் கருத்துக்களை அதிகமாகப் "பெரிது" படுத்திச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன்.

விசேட காலங்களில் நீங்கள் மேற்கொள்கின்ற 'முறைதலைகள்' செட்டியார்களுக்கு எவ்வளவு மலைப்பாக இருக்கிறது தெரியுமா? அர்த்தமில்லாமல் முறையில்லாமல் செய்யும் முறைதலைகள் வசதி படைத்தவர்களுக்குக் கூடச் சலிப்பினை உண்டாக்கி விடுகின்றன. பெண்கள் முழுகாமல் நிற்பதற்கு முன்பே விளையாட்டுப் பொட்டிவேவு வரை முறைதலைகளை எழுதி மொத்தமாக வாங்கிக்கொள்ளும் முறைதலை வசூல் பழங்காலத்தில் வரி வசூலித்த ஒரு கொடிய அரசனை நினைவூட்டுகிறது. பழைய காலத்தில் வீட்டுக்காரர் தொலைக்கு (பர்மா, இலங்கை, மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு)கொண்டுவிற்கப்போனார். கொண்டு வந்த செல்வத்தை அன்றைக்குள்ள வாழ்க்கைத் தரத்திற்கு எப்படிச் செலவிடுவது என்று புரியாமல் ஒரு வீதியை வளைத்து வீடாகவும் கட்டியதோடு ஏராளமான சடங்குகளையும், விழாக்களையும் நடத்தினார்கள். இப்படி வாண வேடிக்கை விட்டும் கைப்பெட்டியில் பணம் இருந்தது. ஆனால் இன்று நம்முடைய பிள்ளைகள் மாதச் சம்பளகாரர்களாக உள்நாடுகளில் சிதறி வேலைகளில் இருந்து அடுத்த முதல் தேதி எப்பொழுது வரும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிற காலமாகப் போய்விட்டது. பொருளாதாரத்தில் இத்தகைய வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறபொழுது முறைதலைகளும் வீழ்ச்சியடைந்தால் தானே முறையானதாக இருக்கும். கரும்பு தின்னக் கூலி என்பது போலத் திருமணம் விசாரிக்க வந்த உறவினர்களுக்குக் கொடுக்க வேண்டிய இந்த "முறைதலைகளை" நோட்டில்எழுதி வைத்துக் கொண்டு இதைக் கொடுக்கும் பழக்கத்தை நீங்கள் விட்டொழிப்பீர்களா? ஒரு செட்டியார் வீட்டில் கொடுக்கும் முறைதலைகளைக் கூட்டிப் பார்க்கும்பொழுது அத்தொகையில் வேறொரு சாதிக்காரர் ஒரு திரு

மணம் நடத்திக் கொண்டிருக்கிறார் என்பதனை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து நகரத்தார் 'பொண்டுகளை' நான் நினைக்கையில் பலகாரமும் சாப்பாடும்தான் நினைவுக்கு வருகிறது. நீங்கள் சுட்டுக் குவிக்கும் வெள்ளப் பணியாரமும், பலநாள் நினைவிலிருக்கும் பால் பணியாரமும் கல்கண்டு வடையும், பதினாறு சுத்து முறுக்கும், தேன் குழலும் தங்கமெடல் பரிசு பெறக்கூடிய தரமான பலகாரங்கள். எட்டு வீட்டுக்கு நெய் மணக்கப் பலகாரங்கள் செய்யும் உங்கள் சிறப்பினை எடுத்துரைக்க நாளும் போதாது, நாவும் போதாது.

மனிதன் வாய்க்கு ருசியாகச் சாப்பிட வேண்டியதுதான். ஆனால் தன் நேரத்தையும் பொருள்களையும் பலகாரங்கள் செய்வதிலேயே செலவிடலாமா? விருந்துக் காலத்திலும் விசேஷ நாட்களிலும் நீங்கள் நெற்றி வேர்வை நிலத்தில் விழ இலையில் போட்ட வடைகளும் பிற பலகாரங்களும் வெளியே வீணாக எச்சிலையில் குவிந்து கிடப்பதை ஒரு முறை பாருங்கள். வசதி இருக்கிறதோ இல்லையோ அடுத்த வீட்டில் செய்தார்கள் என்பதற்காக அதே பலகாரங்களைச் செய்து குடும்பத்தைக் கடன்காரக் குடும்பமாக்குவதில் யாருக்கு என்ன லாபம்?

காலத்திற்கு ஏற்பப் பழக்க வழக்கங்களை மாற்றிக் கொள்ள வேண்டாமா? வீணான கௌரவத்திற்காகப் பணத்தை வீணாக்கி விட்டு வேதனைப் படலாமா? சமயற்காரச் செட்டுகளைக் கல்யாணங்களுக்கு ஏற்பாடு செய்து அதனால் நம் பணம் கொஞ்சமா அழிகிறது. இந்தப் பழக்கங்களால் பிற்காலத்தில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் தானே பெரும் சிரமங்களுக்கு ஆளாவோம்; இப்பொழுதே ஆளாகிக் கொண்டுதானே இருக்கிறோம்.

நீங்கள் எந்த ஊருக்குப் போனாலும் இவ்வளவு சாமான்கள் ஏன் வாங்கிச் சேர்க்கிறீர்கள். இந்தப் பழக்கம் பணமுடையான இக்காலத்தில் கூட இன்னும் போகவில்லையே. ஒரு ஆச்சி இராமேசுவரம் போய்விட்டு மானாமதுரையில் பானை சட்டி வாங்கிக் கொண்டு செட்டிநாடு வந்து சேருவதற்குள் பட்டபாடு அடடா எப்படி எழுதுவேன். தான் வாங்கி வந்த சட்டிபானை உடைந்து போய்விடும் என்று ஓடுகின்ற ரயிலை "பட்டுக்கடப்பான் பாவி பரப்பான் வேகமாக ஓட்டுகிறானே, சட்டிபானை உடைஞ்சிடுமே" என்று இரயிலைச் சகஸ்ர நாம அர்ச்சனை செய்து கொண்டு வந்தார்கள். கல்கத்தாவுக்குப் போனால் வாளி, காசிக்குப் போனால் பட்டு, மலேயா போனால் மங்குச் சாமான் என்று ஊருக்கு ஊர் சிறப்புப் பெற்ற சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து தூசி தட்டி அடுக்கி வைத்ததைத் தவிர என்ன பயன் கண்டோம்.

சிட்டி வைத்து விளையாடும் குழந்தைகள் "எம்புட்டு" "ஒம்புட்டு" என்று சொல்லிக் கொள்வது போல எம்புட்டு பணம்-உங்க வீட்டுப் பணம்" என்று கணவனோடு பேசும்போது வார்த்தைகள் வரலாமா? கணவனை உயர்வு படுத்தினால்தானே நீங்கள் உயர முடியும்? நம் மரபுப் பெண்கள் எல்லாரும் நல்ல பக்தி உள்ளவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நான் அதிகம் எழுத வேண்டும் என்பதில்லை.

"ஆசைக்கொரு பொண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும்" பெற்றால்

கூட உங்களது அன்பு ஆசை எல்லாம் மகள் மேல்தான் இருப்பதாக மனம் நொந்து போன பல பையன்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். தன் மகன் கொலைகாரனாக இருந்தால்கூட தாய்மையின் அன்பு சிறிதும் மாறுபடாது என்று தாயன்பிற்கு உலகத்தில் சிறப்புச் சொல்கிறார்கள். பெற்ற மகனிடம் தன் தாய் மகளுக்கு மட்டும் தாயாகக் காணப்படுகிறாள் என்ற கவலையை இனியாவது போக்கலாமா? வளர்ந்த குழந்தைகளிடம்தான் இந்த உறவுமுறை உண்டு என்று கூறமுடியாது. பெற்ற குழந்தைகளிடம்கூட சில நேரங்களில் குழந்தை நலம் பேணுதிருத்தல் பலரிடம் குடி புகுந்திருக்கிறது. சென்னை, பம்பாய் கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் ஒரு பெரிய வீட்டில் பல குடும்பங்கள் வாழக்கூடிய சூழ்நிலை இன்றைய உலகில் ஏற்பட்டுவிட்டது. நாளும் பொழுதும் நல்லதாக கழிய வேண்டும் என்றால் விழித்து எழுந்தவுடன் அடுத்தவரோடு முறைத்துக் கொண்டு வாழ்ந்தால் எப்படிக் கழியும்? வாழ்க்கையிலே அமைதி தானே மிகப் பெரிய பேரின்பம். செட்டிநாட்டில் ஒரு வளவுக்குள் இருக்கும் பல குடும்பத்தார்களைப் பற்றி நான் எழுதியா தெரிய வேண்டும்? பொம்பிளைகள் சண்டையால் ஆம்பிளைகளும் அந்த வளவிற்குள் உள்ள ஆம்பிளைகளோடு பேசாத உண்ணு விரதத்தை செட்டியார்கள் தம் வாழ்நாள் முழுதும் பின்பற்ற வேண்டியதிருக்கிறது. இதனால் எல்லாருக்குமே நிம்மதிக் குறை.

நீங்கள் வீட்டுக்குள்ளேயே நாள், பொழுது நேரம் எல்லாம் கழித்துவிடுகிறீர்கள். உலகம் எவ்வளவு விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது தெரியுமா? காலத்தை ஒட்டி எத்தனை சீர் திருத்தங்கள் தலைவர்கள் இருந்து வழிகாட்டாமலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று தெரியுமா? இந்தியாவின் பிரதமர் ஒரு பெண் என்பதனையும் இலங்கையில் பிரதமராக ஒரு பெண் இருந்தார் என்பதனையும் நீங்கள் அறியவேண்டும். இன்று ஒவ்வொரு இனத்தாரும் காலத்தையும் பொருளாதாரச் சூழ்நிலையும் ஒட்டி எவ்வளவோ மாற்றங்களைச் செய்துகொண்டு போகிறார்கள். நகரத்தார்கள் செய்ய விரும்பும் சீர்திருத்தத்திற்கு நீங்கள் உதவியாக இருக்கவேண்டும். பழங்காலத்தில் கோலாலம்பூரில் கொண்டு விற்றாலும் கொப்பனாபட்டியில் திருமணம் செய்தோம். மலேயாவில் தோட்டம் இருந்தாலும் மகிபாலன்பட்டியில் புதுமை செய்தோம். சிரம்பானில் கொடுக்கல் வாங்கல் இருந்தாலும் சிவல்பட்டியில் சாந்திக் கல்யாணம் செய்தோம். இது பழைய வரலாறு. இன்றும் இப்படியே செய்யவேண்டும் என்று நினைப்பது நலிந்து வரும் சமூகத்திற்கு நல்லதல்ல. இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களில் சிதறிக் கிடக்கும் நகரத்தார் பையனிடம் ஊருக்கு வந்துவிட்டுச் செல்வதற்கே பணம் இல்லாத நிலையில் அவனது பொருளாதாரம் இருக்கிறது. இராமன் இருக்கிற இடம் அயோத்தி என்பது போலப் பல செட்டியார்கள் வாழும் எந்த ஊராக இருந்தாலும் அதனையும் நகரத்தார் ஊராகக் கொள்ளும் உத்தம குணம் உங்களுக்குக் கட்டாயம் வர வேண்டும். செட்டி நாட்டில் உள்ள சில பணக்காரர்கள் இப்பொழுது அண்மையில் வெளியூர்களில் திருமணம்செய்ய முற்பட்டு விட்டார்கள் என்பதையும் உங்கள் காதில்போட்டு வைக்கிறேன். யாதும் ஊரே யாவரும் கேளிர் (உறவினர்) என்ற அருமையான உலகப்புகழ் பெற்ற பாட்டுப்

பிறந்த மண் செட்டி நாட்டில் பூங்குன்றம் என்ற மகிபாலன் பட்டி என்பதனையும் இக்கருத்தினை ஒட்டி உங்களுக்கு நான் நினைவூட்டுகிறேன்.

அடுத்து நீங்கள் துணிவு உள்ளம் கொண்டவர்களாக வாழ முயல வேண்டும். கல்யாணம் ஆகாத பெண்ணைத்தான் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்ற வேண்டும் என்பார்கள். ஆனால் கல்யாணம் ஆன பிற்பாடும் கூட அந்தப் பெண்களுக்குப் பழைய பழக்கத்தில் வெளியே செல்லவோ, பழகவோ துணிவு வராததால், வெளியூரில் சம்பாதித்துக் கொண்டிருக்கும் ஒரு நகரத்தார் பையனுடைய மனைவி தனது இரண்டு குழந்தைகளையும் கூட்டிக் கொண்டு ஊர் வந்துவிட்டுச் செல்லத் துணிவில்லாமல் வாழ்க்கை முழுதும் இருக்கிறாள். அந்தப் பெண் ஊருக்குப் போகிறாள் என்றால் ஒவ்வொரு முறையும் கணவனும் செலவழித்துக் கொண்டு பெண் அழைத்துக் கொண்டு வந்துவிடுவது போல விட்டு மீண்டும் பெண் அழைத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட பல குணங்களையும் இனி நீங்கள் காலத்திற்கு ஒப்பமாற்றிக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு நான் எத்தனையோ எழுதிக்கொண்டே போகலாம். கடுதாசியின் நோக்கம் உங்களிடம் மேலே குறிப்பிட்டவைகள் மன மாற்றம் அல்லது மனப்புரட்சியின் மூலம் சீர்திருத்தம் அடைய வேண்டும் என்பதே ஆகும். அதனால் ஒரு சில எழுதினேன். காலத்திற்குத் தக்க சில மாற்றங்களை நீங்கள் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும். உதாரணமாக நமக்குத் தடுமன் பிடித்த நேரத்தில் வெந்நீரை நாம் பயன்படுத்தவில்லையா? தடுமன் பிடித்த பிறகும் வெந்நீரைப் பயன்படுத்த மாட்டேன். பச்சைத் தண்ணீரையே பயன்படுத்துவேன் என்றால் தடுமன் சரியாகப் புரையோடும். சளி நெஞ்சை அரிக்கும். மூச்சு இழுக்கும். (ஆஸ்த்மா) பின் வாழ்க்கை முழுதும் துன்பம். துன்பத்தை அனுபவிப்பதற்காகப் பிறந்தோமா? அல்லது இன்பத்தை அனுபவிப்பதற்காகப் பிறந்தோமா? உங்கள் வாழ்வில் விரலுக்குத் தகுந்த வீக்கம் இல்லை என்றால் நம் மரபில் எப்படி நிம்மதி ஏற்படும். ஒரு பெண்ணுக்கு வாழ்வரசியாக வாழ்க்கை முடிவது உயர்ந்த வாழ்வு என்பார்கள். ஜப்பானில் பெண்கள் தங்கள் கூந்தலை அவர்கள் நாட்டிற்கேற்ப கிராப்பாக வெட்டிக் கொள்ள மறுத்ததால் புரட்சி வீரர்கள் தோன்றவேண்டிய ஒரு கட்டம் உருவாகியது. இரண்டு கைகளையும் தட்டினால்தான் ஓசையெழும். செட்டியார்கள் மட்டும் சீர்திருந்திப் பயன் என்ன? ஆச்சிமாராகிய உங்கள் மனமும் அதில் சேர்ந்து ஈருயிர் மனமும் ஒருயிர் மனமாகி மலர்ந்தால் அம்மணத்திற்கு மல்லிகைப் பூவின் மணம் கூட ஈடாகாதே.

ஆதலால் நான் ஆரம்பத்தில் எழுதியது போல இதில் கூறப்பட்ட விஷயங்கள் பல நகரத்தாருடைய கருத்தாகக் கொள்ள வேண்டும். பலமுறை படிக்கச் சொல்லிக் கேட்கவேண்டும். ஒய்வு என்பதை அறியாத உங்களை "ஒறண்டை" இழுப்பதற்காக இதனை எழுதினேன் என்று நினைக்க மாட்டீர்கள் என்று கருதுகிறேன். பிற சமூகத்தார்கள் எல்லாம் சீர் திருந்தி வரும் இந்த நேரத்தில் நம் சமூகம் சீர்திருந்த வேண்டும் என்று "மெனக்கெட்டு" எழுதினேன் என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வேணும்

தெண்டாயுதபாணி துணை.

மலரும் உள்ளம்



கணிதமேதை நிறுவிய காந்திபள்ளி

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

"காந்திமகான் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தோம். அத்துடன் அவரது நூற்றாண்டு விழாவை நம் வாழ்நாளிலே கொண்டாடும் நற்பேற்றினையும் பெற்றோம்" என்று பெருமைப்படுவோர் பலர்.

'காந்திமகான் வாழ்ந்த காலத்திலே வாழ்கின்ற வாய்ப்பினைப் பெறாது போனாலும், அவரது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் வாய்ப்பினையாவது பெற்றோமே!' என உள்ளம் மகிழும் இளைஞர் பலர்.

காந்தி நூற்றாண்டுவிழா நடைபெறும் இந்த ஆண்டில், காந்தி பெயரால் பல பொது நிலையங்களை நிறுவி, மேன்மேலும் காந்தியக் கொள்கைகள் பரவ வழி காண வேண்டும் என்று நினைப்பவர்கள் பலருண்டு. சமீபத்தில் வாழ்ந்து மறைந்த, அல்லது இன்று நம்மிடையே வாழ்ந்து வருகின்ற தலைவர்கள் பெயரால் கல்விக் கூடங்களும், மருத்துவ மனைகளும், நகரங்களும், மண்டபங்களும் நாள்தோறும் தோன்றி வருகின்றன. காந்தி பெயரிலும்:' ஓரிரு கல்விக் கூடங்கள், மருத்துவ மனைகள் போன்றவற்றை ஏற்படுத்தக் கூடாதா என ஏங்குகின்றனர் சில உண்மைத் தொண்டர்கள்.' அவர்களுக்கு ஆறுதலளிக்கும் செய்தி ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு 'வந்தே மாதரம்' 'சுதந்திரம்', 'மகாத்மா காந்தி' போன்ற சொற்களைக் கூறுவதற்குக் கூடச் சுதேச சமஸ்தானங்கள் தடை விதித்து வந்த காலம் அது. அச்சமயம், புதுக்கோட்டை சமஸ்தானத்தில், இராயவரத்திலே காந்திஜியின் பெயரால் ஒரு பாடசாலையைத் துவக்கினார் சு. கதி. கதிரேசன் செட்டியார் அவர்கள். அந்தச் சமஸ்தான மன்னர் பெயரையோ அல்லது தமது சொந்தப் பெயரையோ வைக்காமல், காந்தியின் பெயரிலே பள்ளியைத் துவக்கியது, கதிரேசன் செட்டியாரின் தேசபக்தியை மட்டுமன்று, அஞ்சா நெஞ்சத்தையும் எடுத்துக் காட்டியது. "காந்தி பெயர் இருக்கும்வரை

அரசாங்க மானியம் தரமாட்டோம்! அப்பெயரை அகற்றினாலே மானியம் கிடைக்கும்" எனப் புதுக்கோட்டை அரசினர் ஒரு முறை கூறினர்.

"காந்தி பெயரை எடுப்பதா? முடியாது; முடியவே முடியாது. உங்கள் உதவி தேவையில்லை" என்று உறுதியோடு கதிரேசன் செட்டியார் கூறிவிட்டார்.

கதிரேசன் செட்டியார் பணக்காரர் அல்லர். ஆயினும், அவரது கல்வித் தொண்டுள்ளமும், காந்தியக் கொள்கைப் பிடிப்பும் எத்தனையோ இடர்களுக்கிடையிலும் அயராது பணியாற்றச் செய்தன.

காந்திமகானின் தேசத்தொண்டினைப் போலவே, அவரது சீர்திருத்தக் கருத்துக்களும் கதிரேசரது உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தன. காந்தியின் பெயரால் பள்ளியை நிறுவியதோடு அவர் நிற்கவில்லை. காந்தியக் கொள்கைகளையும் பிஞ்சு மனத்திலே கொஞ்சம் கொஞ்சமாகப் புகுத்த விழைந்தார். பலரது எதிர்ப்புகளுக்கிடையே, 1927-ஆம் ஆண்டிலே நகரத்தார் குழந்தைகளுடன், சாதி, சமயவேறுபாடின்றி மற்றக் குழந்தைகளையும் மகிழ்ச்சியோடு பள்ளியில் சேர்த்துக் கொண்டார். அப்பள்ளி மாணவர்கள், தினமும் இராட்டையில் நூல் நூற்கக் கற்றுக்கொள்வர். பாரதியாரது தேசபக்திப் பாடல்களையும், தெய்வ பக்திப் பாடல்களையும் மாணவர்கள் கணீரென்ற குரலில் உணர்ச்சி ததும்பப் பாடுவர். அக்காலத்திலே மகாகவி பாரதியாரின் பெருமையைக் கதிரேசனர் நன்குணர்ந்திருந்ததே இதற்குக் காரணம்.

கல்விப் பணியே கடவுட் பணியெனக் கருதிய கதிரேசனர் நாள்தோறும் தவருது பள்ளிக்கு வருவார். ஆசிரியர்களோடு ஆசிரியராயிருந்து மாணவர்களுக்குத் தமிழ், கணிதம் போன்ற பாடங்களைச் சுவையாகப் போதிப்பார். காந்தி பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமன்றி, மற்ற மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் பல கணித நூல்களை அவரே எழுதி வெளியிட்டு வந்தார். கதிரேசன் கணிதச் சுவடி, கதிரேசன் பெருக்கல் வாய்பாடு, கதிரேசன் வட்டிக் கணக்குப் புத்தகம் போன்ற நூல்கள் அக்காலத்தில் மிகப் பிரபலமானவை. பல பள்ளியினர் அப்புத்தகங்களை ஆண்டுதோறும் விரும்பி வாங்கிச் செல்வதுண்டு.

கணிதத்திலே கதிரேசனர் ஒரு பெரிய மேதை. எவ்வளவு சிக்கலான கணக்கைக் கொடுத்தாலும், ஒரு நொடியில் விடை கூறிவிடுவார். கணக்குகளைப் போடுவதற்கு அவர் எளிய முறையில், பல புதிய வழிகளைக் கண்டு பிடித்துக் கூறி அனைவரையும் வியப்பிலாழ்த்துவார். ஆங்கில அறிவு அவருக்கு இருந்திருக்குமேயாஞல், அவரும் ஓர் இராமானுஜமாகியிருக்கக் கூடும்!

பாங்குகளில் எளிதிலே வட்டி போடுவதற்குப் பயன்படுத்துகின்ற ஆங்கில Ready reckoner போன்றதே அவர் சொந்தமாகத் தயாரித்த வட்டிக் கணக்குப் புத்தகம். அது பலரது பாராட்டைப் பெற்றது. பர்மாவில் அப்புத்தகத்திற்கு நல்ல வரவேற்பு இருக்குமென எல்லோரும் எதிர்பார்த்தனர். ஆனல் அச்சமயம் வெளிநாடுகளில் நம்மவர் நடத்திவந்த வட்டித் தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டதால், அப்புத்தக விற்பனையும் பெருமளவில் பாதிக்கப்பட்டது.

கதிரேசனர் புத்தகத் தயாரிப்புக்காகும் செலவு முழுவதையும்

தம் கையிலிருந்தே போடுவார். ஆனால், அப்புத்தகங்கள் விற்பனையில் கிடைக்கும் பணத்தையெல்லாம் பள்ளிக்கு வழங்கிவிடுவார். அதுமட்டுமன்று, மலேயாவில் மூவார் என்ற ஊரிலே தமக்குச் சொந்தமாக இருந்த கடையில், பள்ளிக்கென ஒரு பங்கும் வைத்திருந்தார். பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கடல்கடந்து அவ்வூர் சென்று கடைக் கணக்குகளைக் கவனித்து வரவும் ஏற்பாடு செய்வார்.

1935இல் கதிரேசனாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவைப் புது முறையிலே அவர் கொண்டாடினார். விழாவுக்காகும் செலவில் பள்ளிக்கூடத்திற்காக ஒரு புதிய கட்டிடத்தைக் கட்டி முடித்தார். புதிய கட்டிடத்தில் மாணவர்கள் வசதியாய் அமர்ந்து படிப்பதைக் கண்டு கண்டு களிப்புற்றார்.

இன்று கதிரேசனார் இல்லை. ஆயினும், அவர் துவக்கிய துவக்கப்பள்ளி படிப்படியாக வளர்ந்து, நடுநிலைப் பள்ளியாகிப் பின் உயர்நிலைப் பள்ளியாகத் திகழ்கின்றது. உயர்நிலைப் பள்ளியுடன், இரு ஆரம்பப் பள்ளிகளும் நன்முறையில் இயங்கி வருகின்றன. செட்டிநாட்டில் சிறந்து விளங்கும் பள்ளிகளில் ஒன்றாக விளங்கும் காந்தி உயர்நிலைப் பள்ளியில் சுமார் 350 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்த ஆண்டு அப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சையில் தேர்வு பெற்றோரின் சதவிகிதம் 85.

கதிரேசன் செட்டியார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு நட்ட செடி, நல் மரமாகி, அம்மரம் பூத்துக் காய்த்துக் கனிதருகின்ற காட்சி, காந்தி நூற்றாண்டு விழாவின் இனியதொரு காட்சி என்பதில் ஐயமுண்டோ?

அஸ்வினி நட்சத்திரத்தின் பலன்

இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் எந்தக் காரியத்தையும் செம்மையாகச் செய்து முடிப்பார்கள்.

நீங்கள் எந்த நட்சத்திரத்தில் பிறந்தீர்கள்?

எந்த நட்சத்திரமாக இருந்தால் என்ன?

ஏனைய 26 நட்சத்திரத்தில் பிறந்தவர்களுடைய பலன்களும் பக்கம் 33-ல் இடம் பெற்றுள்ளன.

நகரத்தார் கடிதநடை

சுப. திண்ணப்பன் எம்.ஏ., எம்.லிட்

இறப்புச் செய்தியை உரைக்கும் கடிதத்தில் இவ்வாறு நலம் நாடும் மரபு அறவே விலக்கப்படும்.

செய்திகள்:-

(வகையும் சிறப்பியல்பும்)

இதுவரை கூறிய முறைப்படி எழுதிய பின்னர்தான் நகரத்தார்கள் செய்திகளை- (தகவல்களை, தாக்கல்களை) எழுதத் தலைப்படுவர்.

(அ) வகை:

(1) பிள்ளை பிறந்த செய்தியைத் தெரிவிக்கும் கடிதத்தில் பிள்ளை பெற்ற ஆடவர் "என் சம்சாரம் உமையாளுக்கும் நாளது மீ 5 உ புதன் கிழமை காலை 8½ மணிக்கு ஆண் குழந்தை பிறந்து தாயும் சேயும் சௌக்கியமாக இருக்கிறார்கள்" என்று எழுதுவது பொது மரபு ஆகும். பெரும்பாலும் பிள்ளை பெற்ற ஆடவர் அல்லது மகளிரின் தந்தையார் அல்லது அவர்கள் இல்லத்தில் உள்ள முதியவர்தான் இது போன்ற கடிதம் (பிறப்பு. இறப்பு, விசேடங்களுக்குரிய அழைப்பு ஆகியவற்றை அறிவிக்கும் கடிதங்களை) எழுதுவது,தொன்று தொட்டுப்போற்றி வரும் மரபாகும். அவ்வாறு எழுதும்போது பிள்ளை பெற்ற ஆடவர் தந்தையார் (இல்லப் பெரியவர்) "நம்மள் வீரப்பனுக்கும்...'' என்று தொடங்கி எழுதுவர். பிள்ளை பெற்ற மகளிர் தந்தையார் (இல்லப் பெரியவர்) "நம்மள் உமையாளுக்கும்..." என்று தொடங்கி எழுதுவர். இவ்வாறு நகரத்தார்கள் தத்தம் மக்கட் செல்வங்களைக் கடிதம் பெறுவோர்க்கும் உரித்தாக்கி உறவின் நெருக்கத்தை உரைக்கக் கையாளும் உளப்பாட்டுத் தன்மைப் பன்மைச் சொல்லாகிய "நம்மள்" என்பதை நாம் உற்று நோக்கி உவகை எய்துதல் வேண்டும்.

(2) உற்றார் உறவினர்களுக்குத் தங்கள் வீட்டில் நடைபெறும் விசேடங்களுக்கு அழைப்பு எழுதும் கடிதங்கள் வருமாறு: "நம்மள் வெட்சுமிக்கும் நாளது மீ 6 உ வெள்ளிக்கிழமை கல்யாணம் வைத்து வேலைகளும் நடந்து வருகிறது. அதற்குத் தாங்களும் குடும்

யத்துடன் நாலு நாள் முன் ஞடியே வந்து சேர வேண்டியது.''

''நம்மள் சாத்தப்பன் மகள் சிகப்பிக்கும் நாளது மீ 15 உ வியாழக் கிழமை காப்புக்கட்டுப் புதுமை வைத்து வேலைகளும் நடந்து வருகிறது. அதற்கு...... வேண்டியது.''

(3) திரைகடலோடியும் திரவியம் தேடும் நகரத்தார்கள் கடல் கடந்து பொருளீட்டப் புறப் பட்டுச் சென்ற பின்னர் தங்கள் இல்லத்தினர்க்கு முதலாவது தாங்கள் நலமுடன் வந்து சேர்ந் தது பற்றி எழுதுவார்கள். அக் கடிதத்தில் கப்பல் பயணம் பற்றி யும் (கடல் அமைதியாக இருந்தது என்ஞே கொந்தளிப்புடன் இருந் தது என்ஞே) தவருது குறிப்பிட்டு எழுதுவர். பொருளீட்டித் திரும் பித் தத்தம் சொந்த ஊர் வந் தடைந்த பின்னர் அயல் நாட்டில் இருப்பவர்களுக்கு எழுதும் கடி தத்தில் கப்பல் பயணம் பற்றிய தோடன்றிக் ''கஸ்டம்ஸ்'' நிலை பற்றியும் குறிப்பிடுவர்.

(4) வணிகத் தொடர்பான கடி தத்தில் முதலாளிகள் எழுதும் போது ஆணையிடும் போக்கிலேயே சொற்ருெடர்கள் அமையும். (எடு:) ''கணக்கை நேர் பண்ண வேண்டியது அல்லது கணக்கில் வரவு வைத்துக் கொள்ளவும்.'' அலுவலாளர்கள் கடிதம் எழுதும் போது பணிவும் அடக்கமும் தோன்றச் சொற்ருெடர்கள் அமைதல் வேண்டும்.

(5) வாழ்த்துத் தெரிவிக்கும் கடிதங்களில் மகிழ்ச்சி தெரிவித்து வாழ்த்தப் பெறுவோர் எல்லாச் செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ ''ஈசுவரனைப் (இறைவனை) பிரார்த்திக்கிறேன்,'' என்று எழுதுவார்கள்.

(6) இறப்புச் செய்திகளை அறி விக்கும் கடிதங்கள் ''என் தகப்ப ஞர் ராமனுதஞ் செட்டியார் அவர்களும் ஒரு வாரமாக உடம்பு சௌகர்யமில்லாதிருந்து நாளது மீ 8 உ வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்குச் சிவபதவி அடைந்து விட்டார்கள்'' என்றவாறு அமை யும். அமங்கலச் சொல் அகற்றி மங்கல வழக்கால் கடிதம் எழுதும் இயல்பையும் சிவநெறிப் பற்றை யும் இக்கடித அமைப்பு இயம்பும்.

(ஆ) சிறப்பியல்புகள் சில:

(1) பொதுவாக எழுத்துக்களைச் சங்கிலி போல் நெருக்கிச் சேர்த்தே எழுதுவதும் முற்றுப் புள்ளியைத் தவிரப் பிற குறியீடு களைக்கையாளாமையும் (Punctuation marks) காணக் கிடக்கும் பண்புகள் ஆகும். வெளிநாட்டில் இருந்து எழுதப்படும் தாள் கன மில்லாது, மிகமிக இலேசாக இருக்கும். அத்தாள்களில் ஒரு பக்கம் மட்டும்தான் எழுது வார்கள்.

(2) கடிதங்களில்தான், தாங் கள் என்ற படர்க்கைப் பெயர் களை முன்னிலைப் பெயர்களாக எழுவாய் நிலையிலும் வேற்றுமை ஏற்ற நிலையிலும் வழங்கும் பண்பு காணப்படுகிறது.

(எடு:) ''தானும் வந்து சேர வேண்டியது.''

''தாங்களும் அவடத்திலேயே தொகையைச் சரிபண்ணிக் கொண்டு தகவல் எழுதச் செய்ய வேண்டியது.''

''தன்னையும் கேட்டுத்தான் தாக்கல் சொல்வதாகச் சொன் னேன்.''

''தங்களுக்கும் பிடித்தம் (விருப் பம்) தானே?''

''தாங்கள் நாளது மீ 15 உ எழு திய லெட்டரும் வந்து சேர்ந்தது.

(3) ஞ(க்கு), ஞ(த்த), ஞ(த்து), ட(ட்ட) என்ற கூட்டெழுத்து வடிவங்களும் (பின்எண் 4.ல்வரும் எழுத்து வடிவங்களும்) செட்டியார்களின் எழுத்துச்சிக்கனத்தைச் செப்பும் திறத்தனவாகும். ராமநாதன் என்பதை ரூநாதன் அல்லது ரூதைன் என்று எழுதுவதும் உண்டு. ராம, என்பதற்குப் பதில் ரூ என்றவடிவம் கையாளப்படுகிறது

(4) நகரத்தார்கள் மட்டுமே கையாளும் சிலஎழுத்துவடிவங்களையும் அவற்றின் பொருள்களையும் கீழே காண்க.

ஷை	மேற்படி	Ditto
ஃ	வரவு	Credit
பூ	பற்று	Debit
யூ	இதுவும் பற்று	This also above debit
வூ	வசம்	Through
நூ	நாளது (நாளிது)	Instant
த	தன் மனைவி	One's wife
ழ்ன்	தன் மகன்	One's Son
ழ்ள்	தன் மகள்	One's daughter
ரூ	ரூபாய்	Rupees
றீ	றிங்கி	Dollor

(மலேயன்டாலரைக்குறிக்கும்)

மைற்ற தாக்கல் பின்பு:

கடிதத்தில் செய்திகள் எழுதி முடித்த பின்னர் "மைற்ற தாக்கல் பின்பு" என்று எழுதுவது வழக்கமாகும். மற்ற என்பது மைற்ற என்று திரிந்து நின்றது. தாக்கல் என்பது (Dakhil) என்ற உருதுச் சொல்லின் தமிழ் வடிவமாகும். கடிதம் எழுதுவோர், பெறுவோரை மிகஅண்மையிலோ கடிதத்திற்குப் பதில் வருவதற்கு முன்போ சந்திக்கப் போவதாக இருந்தால் "மைற்றவை நேரில்"

என்று எழுதுவார்கள். அலுவலாளர்கள் முதலாளிக்கு எழுதும் போது "மைற்ற தாக்கல் அவடம் லெட்டர்பார்த்து" என்று எழுதுவதும் உண்டு.

வேணும் சண்முகநாதன் துணை:

இறுதியில் நகரத்தார்கள் "வேணும்" என்ற சொல்லுடன் "சண்முகநாதன் துணை" என்றோ, "மீனாட்சி துணை" என்றோ "அண்ணாமலையார் துணை" என்றோ தத்தம் வழிபடு தெய்வத்தின் பெயரை எழுதி அதன் துணையையும் இணைத்துக் கடிதத்தை முடிப்பது, (கடிதத் தொடக்கத்தில் அன்றி) இறுதியிலும் கடவுளை வணங்கி வழிபடும் அவர்களின் இறையுணர்வை- கடவுள் நம்பிக்கையைக் காட்டுகிறது தான் எழுதிய செயல்கள் இனிது நிறைவேற, கடிதம் உரியவருக்கு உரிய பொழுதில் பத்திரமாகப் போய்ச்சேர "சண்முகநாதன் துணை" வேண்டும் (வேணும்) என்று எழுதும் போது நகரத்தார்கள் "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற சமயக் கொள்கையில் கொண்ட அழுத்தம்-ஈடுபாடு நன்கு வெளிப்படுகின்றது.

இறப்புச் செய்திகளை அறிவிக்கும் கடிதத்தில்-மைற்ற தாக்கல் பின்பு வேணும் சண்முகநாதன் துணை" என்று எழுதுவதில்லை.

கையெழுத்துப் போடாமை:

நகரத்தார்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் இறுதியில் கையொப்பம் இடுவதில்லை. தம் முதலாளி வாசகம் சொல்லக் கேட்டு அலுவலாளர் கடிதம் எழுதினால் அக்கடிதத்தை அவர் "வேணும் சண்முகநாதன் துணை" என்று போடாமல் முதலாளியின் பார்வைக்குக் கொண்டு வந்து வைப்பார். முதலாளி கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு "வேணும் சண்முகநாதன் துணை" என்று கடிதத்தில் எழுதி நிறைவு செய்வார். இதுவே அவர் கையொப்பம் போலக் கருதப்படும்.

பி. கு.

கடிதத்தை முடித்த பின்னர் ஏதேனும் எழுத வேண்டுமென்று விரும்பினால் பி. கு. (பிற்குறிப்பு) என்று இணைத்து எழுதுவது மரபு.

இணைப்பு:

கடிதத்துடன் ஏதேனும் இணைத்திருந்தால் அது பற்றிக் கடிதத்திலே "இத்துடன் செக்குத்தாள் ஒன்றும் அனுப்பியிருக்கிறது. வந்து சேர்ந்த விபரம் எழுத வேண்டியது" என்றும் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

மடித்தலும் உறையில் இடுதலும் :

கடிதத்தைக் கவனமாக மடித்து அஞ்சல் உறையில் இடுவார்கள். பின்னர் அந்த உறையை ஒட்டுவதற்கு முன்னர் உறையில் தடவப்படும்-பசை கடிதத்தில் ஒட்டிக் கடிதம் பழுதடையாமல் இருக்க ஒரு துண்டுத்தாளை எடுத்து விளிம்பு ஓரத்தில் மடித்து வைத்துப் பின்னர்தான் பசையால் ஒட்டுவார்கள். இச் செய்கை நகரத்தார்கள் சிறியனவற்றையும் சிந்தித்துச் செம்மையாகச் செய்து முடிக்கும் விழிப்புணர்வை வெளிப்படுத்துகிறது.

உறையின் மேல் :

அஞ்சல் உறையின் மேலும் "உ" (பிள்ளையார் சுழி) போட்டுக் கீழ் "இவை" என்று எழுதுவார்கள். பின்னர்க் கடிதம் பெறுவோர் பெரியவராக இருப்பின் "ஸ்ரீ" போட்டு விலாசம் எழுதுவார்கள். சிறியவராகவோ பெண்டிராகவோ இருப்பின் "தின்னப்பன் வசம் கொடுப்பது" என்றோ "மீனாட்சி (ஆச்சி) வசம் கொடுப்பது" என்றோ எழுதுவது வழக்கமாகும்.

எழுதுவோர் தன் விலாசம் தெரிவிக்க விரும்பினால் உறையின் கீழ் இடப்பக்க மூலையில் அனுப்பு(தல்) என்று எழுதிப் பின் கீழ்விலாசம் எழுதுவது உண்டு. அனுப்பு

(தல்) என்பது From or sender என்பதை உணர்த்தும்.

Personal, என்பதற்குப் பதில் "தனது பார்வை" என்று உறையின் மேல் இடப்பக்க ஓரத்தில் எழுதுவார்கள். Certificate of posting, registered போன்றவை "சர்டிபிகேட் ஆப் போஸ்டிங்" "ரிஜிஸ்டர்டு" (ரிஜிஸ்தர்) என்று தமிழ் வரி வடிவத்திலல் உறையில் எழுதப் பெறும்.

கடிதங்களைப் பேணிக்காத்தல் :

நகரத்தார்கள் தமக்கு வரும் கடிதங்களைப் படித்து முடித்ததும் அந்தக் கடிதங்களிலோ அவற்றின் உறையின் மேலோ கடிதம் வந்த தேதியை எழுதி வரவு வைப்பது வழக்கம். அக்கடிதத்திற்குப் பதில் எழுதிய நாளையும் அதில் குறித்து வைத்துக் கொள்வார்கள்.

தமக்கு வரும் கடிதங்களை எல்லாம் தேதிவாரியாக அடுக்கி வைத்து வருடம் முடிந்ததும் ஒரு கட்டாகக் கட்டி வைத்துப் பேணிப் பல்லாண்டுகள் போற்றிக் காத்து வருவதும் அவர்கள் பண்பாகும். இதற்கென்றே சில வீடுகளில் பல தடுப்புக்கள் கொண்ட தேக்கு மரப் பலகையும் இருக்கும். துணிப் பைகளும் பயன்படுத்தப் பெறும்.

இவ்வாறே தாங்கள் எழுதும் கடிதங்களின் (இன்றியமையாதவற்றின்) உண்மைப் படி (True copy) எடுத்து வைத்துக் கொள்வதும் உண்டு. இதற்காக வீடுதோறும் ஒவ்வோர் அழுத்தும் இயந்திரம் (Pressing machine) முன்னுளில் இருந்து வந்தது. இலேசான தாள்களைக் கொண்ட பெரிய புத்தகத்தின் இரண்டு தாள்களுக்கு இடையே தாங்கள் எழுதிய கடிதத்தை வைப்பார்கள். நீர் உறிஞ்சுதாள் (Blotting paper) நன்றாகப் பிழிந்த ஈரத்துணி ஆகியவற்றின் துணைகொண்டு, அழுத்தும் இயந்திரத்தில் வைத்து அழுத்திக் கடிதத்தைப் பெரிய புத்தகத்தில் உண்மைப்படி - எடுத்துவைத்துக்கொள்வார்கள். நகரத்தார்கள் தாங்கள் எழுதும் கடிதங்களையும் தங்கட்கு வரும் கடிதங்களையும் இவ்வாறு பேணிப் பொன்னே போல் போற்றிக் காக்கும் இயல்பு கடிதங்களை ஆவணங்களைப் (Records) போலக் கருதிக் காக்கும் உணர்வு அவர்களின் வாணிக நாட்டத்தையும் வருமுன்னர்க் காக்கும் திறத்தினையும் இயம்புகிறது.

முடிவுரை :

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்பதற்கேற்பநகரத்தார்கள் கடிதம் எழுதும் நடையிலும், முறையிலும், மொழி அமைப்பிலும் இக் காலத்தில் (இளம் தலைமுறையினரிடத்தே) பெருமாற்றத்தைக் காணுகிறோம். விஞ்ஞானத்தின் விளைவால் வேகமாக இயங்கும் இந்நாளைய உலகில் சுருக்கம் எளிமை காரணமாகவும் ஆங்கிலத்தின் செல்வாக்காலும், பழைய நெறியும், போக்கும் மாறி, புது நெறி உருவாகியுள்ளது. இப்போது நகரத்தார் குல மகளிரும் கல்வி கற்ற காரணத்தால் கடிதம் எழுதத் தலைப்பட்டுள்ளனர். ஆனல் (கல்வியின்மை காரணமாக) முன்னைய தலைமுறை மகளிரிடத்தில் கடிதம் எழுதும் வழக்கம் இருந்ததாகத் தெரிவில்லை.

பழைய தலைமுறையினர் எழுதும் கடிதங்களின் நடையமைப்பும் மொழிநிலையும் நகரத்தார்களிடம் அமைந்து கிடக்கும் தனி நாகரிகப் பண்புகளான கடவுட்பற்று, பழமை நாட்டம், புதுமையைத் தழுவும் போக்கு வரிசையறிந்து சொல்லை வழங்கும் திறன், சிக்கனமாகக் கூட்டெழுத்துக்களைக் கையாளும் சிறப்பு, வருமுன்னர்க் காக்கும் வாணிப நோக்கு, கடிதங்களைப் பேணிக் காக்கும் கவனமுடைமை முதலியவற்றை நன்கு விளக்கும் இயல்பின எனலாம்.

நட்சத்திரப் பலன்

பரணி

தன் பெற்றோருக்கு நல்ல பிள்ளையாக நடப்பார்கள்.

கிருத்திகை

சாதுர்யமான பேச்சுத் திறமையைப் பெற்று விளங்குவார்கள்.

ரோகிணி

பிறருக்கு உதவி செய்வதில் விருப்பம் உடையவர்களாக இருப்பார்கள்.

மிருகசீர்ஷம்

எப்பொழுதும் சுறுசுறுப்பு உடையவர்களாக இருப்பார்கள்.

திருவாதிரை

எதிலும் கண்ணியம் வாய்ந்தவர்களாக இருப்பார்கள்.

புனர்பூசம்

சிக்கனம் உள்ளவர்களாய் இருப்பார்கள்.

பூசம்

வக்கீல்களைப்போல வாதாடுவதில் வல்லமை உடையவர்களாக இருப்பார்கள்.

ஆயில்யம்

பகைவர்களுக்குப் பயப்படாத குணமுடையவர்களாக விளங்குவார்கள்.

மகம்

சுற்றுப் பயணங்களில் பிரியம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

பூரம்

கல்வியில் ஆர்வமுடையவர்களாக இருப்பார்கள்.

உத்திரம்

பெண்ணிடம் விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

ஹஸ்தம்

குருவினிடத்தில் பக்திமிக்கவர்களாக இருப்பார்கள்.

சித்திரை

சிறிது முன் கோபக்காரர்களாக இருப்பார்கள்.

சுவாதி

உணவில் பிரியம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

விசாகம்

நல்ல நீதிமான்களாக விளங்குவார்கள்.

அனுஷம்

புகழைத் தேடிக்கொள்ள ஆசைப்படுவார்கள்.

கேட்டை

பக்திமான்களாக விளங்குவார்கள்.

மூலம்

ஆத்மிகத் துறையில் முன்னேற்றம் உடையவர்களாக இருப்பார்கள்.

பூராடம்

தம்மை அடுத்தவர்களைக் காப்பாற்றுவதில் ஆர்வம் உடையவர்களாக இருப்பார்கள்.

உத்திராடம்

தங்களுடைய சுற்றத்தார் நலத்தில் அக்கறை உடையவர்களாக இருப்பார்கள்.

திருவோணம்

எப்போதும் உற்சாகம் உடையவர்களாக இருப்பார்கள்.

அவிட்டம்

தியாக குணம் படைத்தவர்களாக இருப்பார்கள்.

சதயம்

பொய் பேச விரும்பமாட்டார்கள்.

பூரட்டாதி

பிறர் சொல் பொறுக்காதவர்களாகவும், பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

உத்திரட்டாதி

நல்லவர்களுக்கு நல்லவர்களாகவும், பொல்லாதவர்களுக்குப் பொல்லாதவர்களாகவும் இருப்பார்கள்.

ரேவதி

பிறர் பேச்சைக் கேட்பவர்களாக இருப்பார்கள்.

பலன்களை அறிந்து கொண்டீர்கள்?

எழுதியவரைத் தெரிந்துகொள்ள வேண்டாமா;

பக்கம் 39-ஐ-பாருங்கள்.

செய்தி மலர்

● திரு. ஏ. எல். சீனிவாசன் அவர்கள், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சங்கத்தின் 1969-70-ஆம் ஆண்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆறாவது முறையாக அவர்கள் இப்பதவி வகிப்பது நம்மரபினர் பெருமைக்கும், அவர்களின் திறமைக்கும் சிறப்பிற்கும், ஓர் எடுத்துக் காட்டாகும்.

● தேவகோட்டை, கந்தர் சஷ்டி விழாக் கழகத்தின் இருபத்துநாலாவது ஆண்டுப் பேரவைக் கூட்டம் சௌமிய ஆண்டு ஆனித் திங்கள் 30-ஆம் நாள் நடைபெற்றது.

திரு. சோம. இராமநாதன் செட்டியார் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

திரு.பழ.சோம. சயிலாசநாதன் செட்டியார் அவர்கள் தலைவராகவும், திரு. சோம. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், திரு அ. சோமையா அவர்கள் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும், திரு. அ. லெ. அ. முத்துவிரப்ப செட்டியார் அவர்கள் பொருளாளராகவும் மற்றும் இருபத்தோருபேர்கள் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

● வாணிபம் செய்வதையேதொழிலாகக் கொண்டவர்கள் நாம்.



எனினும் நம் மரபு இளைஞர்கள் காலத்திற்கேற்ப, பல புதிய துறைகளில் (பொறியியல், மருத்துவம், கணக்கியல், நீதித்துறை)ஈடுபட்டு, சிறப்புற்று வருகிறார்கள். அந்தத் துறைகளையும் சிறப்படையச் செய்கிறார்கள்.

அத்தகையவர்களில் ஒருவராக திரு. அரு. இலக்குவன். பி.ஏ ,பி.எல். அவர்கள் விளங்குகிறார்கள். பள்ளிப் படிப்பினை தேவகோட்டை என்.எஸ்.எம்.வி.பி.எஸ்.உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிப் படிப்பினை திருச்சி செயிண்ட்சோசப் கல்லூ

ரியிலும் சட்டப் படிப்பினை சென்னைச் சட்டக் கல்லூரியிலும் கற்ற அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் தற்பொழுது நீதிபதியாக இருக்கும் திரு ஜி. ராமானுசம் அவர்களிடம் வழக்கறிஞராகச் சில காலம் பணியாற்றினார்கள் இப்பொழுது அரசினர் வழக்குரைஞரிடம் (வருமானவரித்துறை) பணி புரிந்து வருகிறார்கள்.

தஞ்சைமாவட்டத்தில் உள்ள திருவிசலூர் நல்ல கூகூர் சிவாலயத் திருப்பணியைச் செய்த தேவகோட்டை சு. ராம. சு லெ. சு. குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் (தேவகோட்டை பெத்தாள் ஆச்சி மகளிர் உயர்நிலைப் பள்ளியை நிறுவியவர்களும் இக் குடும்பத்தாரே ஆவார்கள்) தேவகோட்டை உயர்நிலைப்பள்ளிப்பழைய மாணவர் சங்கத்தில் நான்கு ஆண்டுகள் செயலாளராகப் பணியாற்றி உள்ளார்கள். எல்லாரிடத்திலும் அன்பாகப் பழகும் பண்புமிககவர்கள்.

● நாட்டரசன் கோட்டை ச.ராம. சங்கர நாராயணன் செட்டியார் மகன் திருவளர் செல்வன் இராமநாதனுக்கும், பாகனேரி உயர்திரு வே. வேலாயுதம் செட்டியார் மகள் திருவளர் செல்வி பத்மாவதிக்கும் 2-7-69ம் நாள் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.

● செட்டிநாடு ஆர்ட்ஸ் அகாடமி தொடக்க விழா 29-6-69ம் நாள் மாலை நடைபெற்றது. விழாவின் நிகழ்ச்சிகளில் ஒரு பகுதியான நவரசக் கவியரங்கத்திற்குக் கவியரசர் கண்ணதாசன் அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்பித்தார்கள். அன்று சாயிபாபா கலாவதி குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.



● திரு. எல். சுந்தரம் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒக்கூரைச் சேர்ந்தவர்கள். துடிப்பும் ஆர்வமும் மிக்க இளைஞரான அவர்கள் பத்திரிக்கை அலுவலகத்தில் பன்னிரண்டு ஆண்டுகள் அனுபவம் பெற்றவர்கள். அத்துறையில் நீங்காத ஆர்வம் உடையவர்கள். அவர்களுக்குச் சொந்தத் தொழில் இருந்தும் இத் துறையில் பணிபுரிந்து வருவதே இதற்குத் தக்க சான்றாகும்

திரு சுந்தரம் அவர்கள் பணியாற்றி வருகின்ற பத்திரிக்கை தமிழ்நாடு. அவர்களுடைய புனைபெயர் "எல்லெஸ்" தமிழ்நாடு நாளிதழாக இருந்த பொழுது திரைஉலகம் தொடர்பான கேள்விகளுக்கு விடைதந்து வந்த இவர்கள் தமிழ்நாடு வார இதழில் எல்லெஸ் என்ற பெயரில் திரைப் படங்களுக்கு விமரிசனம் எழுதி வருவதோடு திரை உலகம் தொடர்பான கற்பனை உரையாடல்களையும் எழுதி வருகிறார்கள். இந்த உரையாடல்கள் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளன. இப்பொழுது தமிழ்நாடு வார இதழ் துணை ஆசிரியராகவும், திரைப்படப்

பகுதி ஆசிரியராகவும், உதவிச் செயலாளராகவும் பணியாற்றி வருகிறார்கள். தமிழ்நாடு செய்தித் தாள் நிர்வாக ஆசிரியர் திரு. கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்களிடம்,இவர் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டுள்ளார்.

● காலப்போக்கிற்கும் முதலீட்டிற்கும் ஏற்பப் பல புதியதுறைகளில் சிறிய அளவுகளில் தொழில்களை மேற்கொள்வது சிறப்புடையதாகும். திருமதி பார்வதி கணேசன் அவர்கள் அத்தகைய முயற்சி ஒன்றை மேற்கொண்டுள்ளார்கள். அவர்கள் தொடங்கியுள்ள நிறுவனத்தின் பெயர்,சாந்தி டிரேடர்ஸ். முகவரி: ஐயப்பசெட்டி தெரு. மண்ணடி. சென்னை 1. இந்த நிறுவனத்தில் துணிக்கடைகள், மற்றும் பலவகைத் தொழில்கள், திருமணங்கள்,மற்றும் பல விழாக்கள் ஆகியவற்றிற்குப் பயன்படும் துணிப்பைகளைத் தயாரித்து அழகிய வண்ணத்தில் அச்சிட்டு மலிவானவிலையில் விற்பனைசெய்து வருகிறார்கள் இத்துடன் தொழிற்சாலைகளின் இயந்திரங்களைத் துடைப்பதற்குப் பயன்படுத்தப் படும் மாட்ஸ் துணி, டங்கிரித் துணி முதலியவற்றை விற்பனை செய்து வருகிறார்கள்.

● திருச்சிராப்பள்ளி நகரத்தார் சங்கத்திற்கு 2-7-69ஆம் நாள் கட்டிடம் ஒன்றினை வாங்கியுள்ளார்கள்.



● பாகனேரி பழ. நா. சுப. சிங்காரம் செட்டியார் மகன் திருவளர் செல்வன் சுப்பிரமணியன் என்ற ராஜாமணி B. E. க்கும் அலவாக் கோட்டை லெ. நா. ராமநாதன் செட்டியார் மகள் திருவளர் செல்வி வள்ளியம்மைக்கும் 5-6-69ம் நாள் மணமகள் இல்லத்தில் சீரோடும் சிறப்போடும் திருமணம் நடைபெற்றது.

புதுமை உலகம்

கை தெரிந்தது!

கதவு திறந்தது!

திறவுகோலின்றி உங்கள் கை ரேகையினால் பூட்டைத் திறக்க முடியுமா? முடியும்! அம்மாதிரியான ஒரு பூட்டினை அமெரிக்காவில் கண்டுபிடித்திருக்கிறார்கள். உங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரேனும் பூட்டுத் துவாரத்தில் குறிப்பிட்ட விரலை வைத்து அழுத்தினால் உடனே கதவு தானாகவே திறந்து கொள்ளும். இது எப்படி? உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களின் கை விரல் ரேகைகள் எடுக்கப்பட்டு அந்தப் பூட்டில் அவை இணைக்கப்பட்டு விடுவது தான் காரணம். எனவே உங்கள் கைரேகை முன் இணைக்கப்பட்டுள்ள ரேகையுடன் பொருந்தினால் உடனே கதவு திறந்துகொள்கிறது. இப் பூட்டுக்களைக் கதவுகளில் இணைத்துவிட்டால் சாவி தொலைந்து விட்டதே என்று கவலைப்படவும் திருடர்கள் கள்ளச் சாவி போட்டு விடுவார்களே என்று கலைக்கவும் வழி இல்லை. கைரேகை நிபுணர்களுக்குப் பலன் சொல்வதற்குப் பயன்பட்டு வந்த ரேகை, கதவுகளைத் திறக்கவும் பயன்படுகிறதே! வாழ்க கை ரேகை!

நிமிடத்திற்கோர் படம்!

நகல் பிரதி எடுக்கும் கருவி (Copying machine) எத்தனையோ இருக்கிறது. ஆனாலும் மூலப் பிரதியின் நிறங்களை அப்படியே பிரதி எடுக்கும் கருவி அதுவும் 8½" × 11" அளவுள்ள பெரிய வண்ணப் படங்களை ஒரு நிமிடத்தில் பிரதி எடுக்கும் கருவி ஒன்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. எந்தவகையான திரவம், அல்லது அமிலம் இன்றிப் பிரதி எடுப்பது இதன் பெரும் சிறப்பாகும். விஞ்ஞானிகளின் சாதனைகளுக்கு இதுவும் ஓர் அத்தாட்சியாக விளங்குகிறது.

மின்முகமழுக்கி

உங்கள் மின் முகமழுக்கி (Electric shave) மின்கலம் சார்ஜ் இன்றி இருக்கிறதா? கவலை வேண்டாம். சார்ஜ் செய்ய மின்சாரம் வேண்டாம். சூரிய ஒளியோ விளக்கொளியோ போதும்! ஓர் அரிய கண்டுபிடிப்பான இதன் வெளி உறையின் மீது மின் உற்பத்திக்குரிய சிறிய செல் பொருத்தப்பட்டிருக்கிறது. முகமழுக்கி இப்பெட்டியினுள்இருக்கும்போது மின் கலங்கள் வெளிச்சத்தால் தாமாகவே சார்ஜ் ஆகிவிடுகின்றன. மின்சாரம் இல்லாமல் மின் கலங்கள் அந்தச் சக்தியைப் பெறுவது பெரும் புதுமை அல்லவா?" செலவில்லாத முகவசிகரம்!

நெருப்பிற்குப் பயப்பட வேண்டாம்

தீப்பிடிக்காத வீடுகள் வேண்டுமா? உடனே பூசுங்கள் புதிய

முறையில் தயாரிக்கப்பட்ட வண்ணக் கலவையை உங்கள் வீட்டுச் சுவர்களில்! தீ பரவுவதை 75 சதவிகிதம் தடுக்கிறது, இந்தப் புதிய வண்ணக் கண்டுபிடிப்பு. தீப்பிடித்தவுடன் இந்த வண்ணம் ஒருவித நுரையாக மாறி, தீயினைத் தடுக்கிறது. வண்ணத்திற்கு வண்ணமும் ஆயிற்று தீத் தடுப்பிற்கு நல்ல தடுப்பும் ஆயிற்று அல்லவா?

தூங்கும் பை

என்ன? பை தூங்குமா? என்று எண்ணுகிறீர்களா? பை தூங்குவதில்லை. இது நம்மைத் தூங்க வைக்கும் பை. சாதாரணப் பை இல்லை. மின்சாரப் பை. இதை இயக்குவதற்கு நான்கு சிறிய மின் கலங்கள் போதும்! (Torch light battaries) தூங்கும்போது நம் கால்களுக்குத் தேவையான அளவு வெப்பத்தைச் சேமித்து வைக்கும் தன்மை கொண்டது. இந்த அதிசயப் பை! நம் உடலிலிருந்து வெளியாகும் வெப்பத்தில் 90 சதவிகிதத்தினை வெளி விடாது காத்துக் கொள்ளும் தன்மை கொண்டது இது. தூங்கும் பையின் துணையிருந்தால் குளிர் காலத்தில் நமக்குக் கவலையே இல்லை அல்லவா?

இயந்திர மிதி

உங்கள் குழந்தைகள் காலணிகளில் உள்ள மண், தூசு இவைகளைத் தட்டாமல் வருகிறார்களா? இனிமேல் அதைப் பற்றிக் கவலை வேண்டாம் இப்பொழுது புது வகையான மிதி ஒன்றினைக் கண்டுபிடித்துள்ளார்கள். அதை வாசலில் பொருத்தினால் அது தானாகவே காலணிகளில் உள்ள மண், தூசு இவைகளைப் போக்கிவிடுகிறது எப்படி? அம்மிதியின்மேல் நின்றவுடன் மின் இயக்கியினால் இயங்கும் பிரஷ் காலணிகளில் உள்ள தூசுகளைத் தட்டி மிதியின் கீழ் உள்ள தொட்டியில் தள்ளி விடுகிறது. இக் கருவியைப் பொருத்திய இல்லங்கள் தூய்மையாக இருப்பதில் வியப்பில்லையல்லவா?

நூலில்லாப் பொத்தான்

உங்கள் சட்டைப் பொத்தான்களைத் தைக்க இனி நூல் தேவையில்லை. ஒரே விநாடியில் பொத்தான் உங்கள் சட்டையில் பொருத்திக் கொள்ளும். ஆமாம்-இதுவும் ஒருபுதிய கண்டுபிடிப்பு.பொத்தானை ஊசியின் மூலம் சட்டையில் இணைத்ததும் பிளாஸ்டிக்-பொருத்தி ஒன்று சட்டையில் பொத்தானை நிரந்தரமாகப் பொருத்திவிடுகிறது. இந்தப் பொருத்தி, சோப்பு-எண்ணெய், முதலியவற்றால் பாதிக்கப்படுவதில்லை. இனி யாரும் சலவைத் தொழிலாளி மீது குறை சொல்ல வேண்டியதிருக்காது அல்லவா?

நட்சத்திரப் பலன்களை எழுதியவர்

தமிழ்வாணன் அவர்கள்

நூல் : ஜோஸ்யம் கற்றுக் கொள்ளுங்கள்

ஆசிரியரின் அனுமதி பெற்று வெளியிடப் பெற்றது.

திருமுகம்

நம் மரபுப் பெண்களின் கல்வியைப் பற்றி ஆனி இதழ் எண்ணத்தில் எழுதியிருக்கிறீர்கள். நம் பெண்களின் கல்வி அறிவைப் பொறுத்துதான் நம் சமூகத்தின் முன்னேற்றம் இருக்கிறது என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. ஆனால் பெண்களை மேல் படிப்புப் படிக்க வைப்பது தவறு என்ற எண்ணம் பரவலாக நம் சமூகத்தினரிடையே பரவியிருக்கிறது. தம் பெண்களை பட்டக் கல்வி கற்கச் செய்தது தவறு என்று அப்பெண்களின் திருமணக் காலம் வரும்போது பல பெற்றோர்கள் வருந்துவதை நாம் கண் கூடாகக் காண்கின்றோம். பணத்திற்கு அல்லாமல் கல்விக்கும் மதிப்புக் கொடுக்கும்படி நம் மரபினரை நகரத்தார் இதழ் துண்டும் வகையில் பணியாற்ற வேண்டும். இதற்கு முதற்படியாக நம் சமூகத்தில் பட்டம் பெற்ற பெண்களின் ஊர், பெயர், பெற்ற பட்டம், விலாசம், கோயில் வேலையில் இருப்பின் அதன் விபரம் இவை கொண்ட ஒரு பட்டியலைத் தொடர்ந்து நகரத்தார் இதழில் வெளியிட வேண்டும். இது போலவே பட்டம் பெற்ற பையன்களின் விபரப் பட்டியலையும் வெளியிட்டு வரவேண்டும். இது படித்த பையன்கள் படித்த பெண்களைத் தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து கொள்ளப் பேருதவியாக இருக்கும்.

பழ. லெ. பழனியப்பன்
செயலாளர், சேலம் நகரத்தார் சங்கம்.

தற்காலத்திற்கேற்ப "தொழில்களை நாடியும் வேலைகளைத் தேடியும் நம் மரபினர் சொந்த ஊர்களிலிருந்து பெருவாரியாக நகரங்களுக்கு வந்து வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலையால் சென்னை மாநகரில் நம் இனத்தவர் நிறைந்த அளவில் வாழ்கின்றார்கள். அவர்கள் தம் பிள்ளைகளுக்குப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இடம் கிடைக்கப் பெறாமல் அவதிப்படும் நிலை மிகவும் பரிதாபமாக இருக்கிறது. நம் இனத்துச் செல்வர்கள் பலர் நம் பகுதியில் பல ஊர்களில் பள்ளிகளையும் சில நகரங்களில் கல்லூரிகளையும் தோற்றுவித்துள்ளார்கள். அந்த முறையில் நமக்கு என்று நம் இனத்தவரால் சென்னை நகரத்தில் எல்லாக் கல்வி வாய்ப்புக்களும் நிறைந்த கல்லூரி ஒன்று தொடங்கப் பெற்றால் பேருதவியாக இருக்கும். இதற்குச் செல்வப் பெருமக்களும் கல்வி வல்லவர்களும் கலந்து சென்னை நகரில் நம் மரபினருக்கு முதலிடம் கிடைக்கத் தக்க வகையில் கல்லூரி ஒன்றினைத் தோற்றுவிப்பார்கள் என நம்புகிறேன்.

பழ. முத்துராமன்
சென்னை.

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12, இராமாநுசம் தெரு, சென்னை-17 தமிழ்நாடு.

ஆசிரியர்—புலவர் நாகசண்முகம்